Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ்Mirror
www.tamilmirror.lk
THURSDAY, AUGUST 25, 2022

வியாழக்கிழமை, 25 ஒகஸ்ட் 2022 | ஒளி: 08 கதிர் 084 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | Free

# 367 பொருட்களின் இறக்குமதிக்கு தடை



சொக்கலேட், வாசனை திரவியங்கள் உள்ளிட்ட 367 பொருட்களின் இறக்குமதியை நேற்று முன்தினம் (23) முதல் அமலுக்கு வரும் வகையில் தற்காலிகமாக தடை செய்து அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது.

தொடர்ச்சி P2



## ஒருநிமிட கவனயீர்ப்பு

■ நிதர்ஷன் வினோத்

இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தினர், யாழ்ப்பாணத்தில் ஒரு நிமிடம் மட்டுமே விசித்திரமான கவனயீர்ப்பு நடவடிக்கையொன்றை நேற்று (24) முன்னெடுத்தனர்.

யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியிலுள்ள இலங்கை வங்கிக் கிளைக்கு முன்பாக நேற்று (24) மதியம் 1.20க்கு ஒன்றுகூடிய வங்கி ஊழியர்கள், பதாகைகளை தாங்கியிருந்ததுடன் ஒரு நிமிடத்துக்குப் பின்னர், மதியம்1.21க்கு கலைந்து சென்றனர்.

தொடர்ச்சி P2

கடன் நிவாரணம் தொடர்பிலான நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளவும்

# சீனாவுக்கு வலியுறுத்து



இலங்கை மீதான கடன் நிவாரணம் தொடர்பான தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளுமாறு சீனாவை இலங்கை வலியுறுத்துவதாக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையுடன் அவ்வாறான வியத்தகு மாற்றங்களை ஏற்படுத்திக்கொள்வது எளிதான காரியம் அல்ல என்பது எமக்கு தெரியும். எனினும், இலங்கை மிகப்பெரிய நெருக்கடியை சந்தித்து வருகின்ற காரணத்தினால் கடன் வழங்குநர்கள் மோதிக்கொள்ளாது ஐக்கியப்பட்டு இலங்கைக்கு சலுகைகளை பெற்றுக்கொடுக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

ஐ.எம்.எப்புடன் இணக்கத்தை எட்டுவதற்கு

## பொருளாதார மறுசீரமைப்பு நடக்கிறது

■ பா.நிரோஸ்

சர்வதேச நாணய நிதியத்தின் ஊழியர் மட்ட இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்கு நாட்டுக்குள் பல்வேறு பொருளாதார மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## ரோஹிதவின் ஹோட்டலுக்கு தீ வைத்த நால்வர் கைது

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்‌ஷவின் இளைய மகனான ரோஹித ராஜபக்‌ஷவுக்குச் சொந்தமான சொகுசு ஹோட்டலுக்கு தீ வைத்து எரித்த சம்பவம் குறித்து, கொலன்ன பொலிஸாரால் நான்கு பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிங்கராஜ வனத்துக்கு அருகாமையில் எம்பிலிப்பிட்டிய பகுதியிலுள்ள கொலன்ன பிரதேசத்தில் அமைந்துள்ள,

தொடர்ச்சி P2



## டொலர் கட்டாயம் அனுப்பவேண்டும்

அரசாங்க ஊழியர்கள், சம்பளமின்றி விடுமுறையை பெற்றுக்கொண்டு வெளிநாடுக்களுக்குச் சென்றதன் பின்னர், மாதாந்தம் டொலர்களை அனுப்புவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## இடைக்கால பட்ஜெட் செவ்வாயன்று உரை

### செப்.2 வாக்கெடுப்பு

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் என்ற ரீதியில் 2021ஆம் ஆண்டு 30ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தைத் திருத்துவதற்கான ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீடு தொடர்பான ஆரம்ப உரை எதிர்வரும் 30 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிகழ்த்தவுள்ளார்.

அடுத்த வாரத்துக்கான பாராளுமன்ற அலுவலல்கள் குறித்துக் கலந்துரையாடுவதற்காக நேற்று (24) முற்பகல் பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்‌ஷ தலைமையில் கூடிய பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவின் கூட்டத்தில் இது குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதற்கமைய ஒகஸ்ட் 30ஆம் திகதி பாராளுமன்றம் பி.ப 1 மணிக்குக் கூடவிருப்பதுடன்,

தொடர்ச்சி P2

## மூன்று பில்லியன் டொலர் நிதி உதவியை பெற பேச்சு

இலங்கைக்கு வருகைதந்துள்ள சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுக்கும் மத்திய வங்கி ஆளுநர் மற்றும் மத்திய வங்கியின் அதிகாரிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று (24) இடம்பெற்றது.

இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலைமைகளில், இலங்கைக்கு மூன்று பில்லியன் அமெரிக்க டொலர்களை நிதி உதவியாக பெற்றுக்கொள்ளும் விதமாக மத்திய வங்கியும், நிதி அமைச்சும் சர்வதேச நாணய நிதியத்துடன் இந்த கலந்துரையாடல்களை முன்னெடுத்திருந்தன.

தொடர்ச்சி P2

## நெருக்கடியை சமாளிக்கும் வேலைத்திட்டம் அவசியம்

### ஐ.எம்.எப் பணிக்குழுவிடம் ஜனாதிபதி கலந்துரையாடினார்



இலங்கை எதிர்கொண்டுள்ள நிதி நெருக்கடி நிலைமைகளில், இலங்கைக்கு வழங்கும் நிவாரண பொதி திட்டங்கள் குறித்தும், கடன் மீள் கட்டமைப்பு வேலைத்திட்டங்கள் குறித்தும் இலங்கைக்கு வருகை தந்துள்ள சர்வதேச நாணய நிதியத்தின் பணியாளர் குழுவிற்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையில் கலந்துரையாடப்பட்டுள்ளது. அடுத்த கட்ட சந்திப்பை, எதிர்வரும் 26 ஆம் திகதி நடத்துவதற்கு இதன்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

ஹிருணிக்காவுக்கு எதிரான வழக்கு

## 13 ஆவது தடவையாக ஒத்திவைக்கப்படுகிறது

### நவ. 1இல் மேலதிக சாட்சிய விசாரணை



கொழும்பு, தெமட்டக்கொடை பகுதியில் இளைஞனொருவர் கடத்தப்பட்டு தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திரவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கின் மேலதிக சாட்சிய விசாரணை

தொடர்ச்சி P2



இந்த வருடத்தில்

## அரிசி தட்டுப்பாடு இல்லை

### அடுத்த வருடம் இறக்குமதியை நிறுத்துவதே நோக்கம்

■ பா.நிரோஸ்

நாடளாவிய ரீதியில் ஐந்து இலட்சம் ஹெக்டேயருக்கும் அதிகமான நிலப்பரப்பில் விவசாய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதால் இந்த ஆண்டு இறுதி வரையில் அரிசிக்கான தட்டுப்பாடு ஏற்படாது என விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## நீதித்துறையை கடுமையாக அவமதிக்கின்றனர்



அரசாங்கத்தின் அமைச்சர்கள் ஜனநாயகத்தின் பெயரால் ஊடகங்களையும் நீதித்துறையையும் விளையாட்டாகக் கருதுவதாகவும், சில பாராளுமன்ற உறுப்பினர்கள் நீதித்துறையை கடுமையாக அவமதிப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ரஞ்சன் ராமநாயக்கவுக்கு ஒரு சட்டமும், அரசாங்கத்தில் உள்ள சிலருக்கு வேறு சட்டமும் நடைமுறைப்படுத்தப்படுவதாகத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், நீதித்துறை மற்றும் ஊடகங்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்படும் இந்த அவமதிப்பு

தொடர்ச்சி P2

இருவேறு சூட்டு சம்பவங்கள்:

## கம்பஹாவில் பலி: காலியில் காயம்

### மோட்டார் சைக்கிள் கும்பல் கைவரிசை

கம்பஹா, பட்டபொத்த மற்றும் காலி, அஹுங்கல்ல பகுதிகளில் நேற்று (24) இடம்பெற்ற இருவேறு துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

## கெர்னருக்கான பிடியாணை மீளப்பெறப்பட்டது

சமூக ஊடக செயற்பாட்டாளரும் காலிமுகத்திடல் போராட்டக்கள உறுப்பினருமான கலாநிதி பத்தும் கெர்னர், கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் நேற்று (24) சரணடைந்ததை அடுத்து, அவருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட பிடியாணை மீளப்பெறப்பட்டது.

கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தொடர்பில் நீதிமன்றில் முன்னிலையாகாமல் இருந்தமைக்காக பத்தும் கெர்னரை கைது செய்யுமாறு கொழும்பு மேலதிக நீதவான் ஹர்ஷன கெகுனாவல, நேற்று முன்தினம் (23) பிடியாணை பிறப்பித்திருந்தார்.

தொடர்ச்சி P2

ஈஸ்டர் தாக்குதல் குறித்து விசாரிக்க

## ஸ்கொட்லாந்து யார்ட் வருகிறது




இலங்கையில் கடந்த 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி இடம்பெற்ற ஈஸ்டர் தாக்குதலின் மூல காரணத்தை கண்டறிய ஸ்கொட்லாந்து யார்ட் பொலிஸ் குழுவொன்று விரைவில் இலங்கைக்கு வரவுள்ளதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எனினும் பாதுகாப்பு அமைச்சு இது குறித்த உத்தியோகபூர்வ அறிவிப்புகள் எதனையும் இதுவரை தெரிவிக்காதுள்ளதுடன், சுயாதீன விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் அதற்கான சர்வதேச ஒத்துழைப்புகளை தாம் தொடர்ச்சியாக பெற்றுக்கொண்டுள்ளதாகவும் தெரிவித்தது.

எனினும், குறித்த தாக்குதல் தொடர்பில் ஒரு சில சர்வதேச அமைப்புகள் ஏற்கனவே இலங்கையில் விசாரணைகளை

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# ஒருநிமிட கவனயீர்ப்பு

இலங்கை வங்கித் தலைவர், மக்கள் பணத்தை முறைகேடாக பயன்படுத்துகின்றார் சட்டம் எங்கே?,பொதுமக்கள் பணத்தை பாதுகாக்குக!, இலங்கை வங்கித் தலைவரின் மோசடிகரமான கொடுக்கல் வாங்கல்களை வெளிப்படுத்துக, இலங்கை வங்கித் தலைவரின் மோசடிகரமான கொடுக்கல் வாங்கல்கள்

தொடர்பான விசாரணைக்காக தடயவியல் கணக்காய்வொன்றை ஆரம்பிக்குக போன்ற வாசகங்கள் பதாகைகளில் எழுதப்பட்டிருந்தன.

# பொருளாதார மறுசீரமைப்பு நடக்கிறது

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று (24) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார். சர்வதேச நாணய நிதியத்தின் ஊழியர் மட்ட இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்கு நாட்டுக்குள் பல்வேறு பொருளாதார மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
இதனடிப்படையிலேயே மின் கட்டணம், மண்ணெண்ணெய் உள்ளிட்டவற்றின் விலைகள் அதிகரிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

நாட்டுக்கு அத்தியாவசியமான பொருளாதார மறுசீரமைப்பை மேற்கொள்ள வேண்டும். ஆனால் இந்த மறுசீரமைப்பு செய்யப்படும் விதம் தொடர்பில் அரசாங்கத்துடன் எமக்கு முரண்பாடுகள் இருக்கின்றன. பொருளாதார மறுசீரமைப்பு என்ற பெயரில் குறைந்த வருமானத்தைப் பெறும் குடும்பங்கள் மீது சுமையை சுமத்த முடியாது என்றார்.

# மூன்று பில்லியன் டொலர் நிதி உதவியை பெற பேச்சு

இதன்போது சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி மற்றும் நிதி அமைச்சின் செயலாளரும் பங்குபற்றிருந்தனர்.

தொழிநுட்ப ரீதியிலான இணக்கப்பாடுகளை இரு தரப்பினரும் எட்டவேண்டியுள்ள நிலையில், சர்வதேச நாணய நிதியத்தின் சார்பிலும் அவர்களது பரிந்துரைகளை முன்வைத்துள்ளதாக மத்திய வழங்கியின் அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.
அதேபோல் இலங்கையின்

> **மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகளை பலப்படுத்தவும் சர்வதேச நாணய நிதியம் வலியுறுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.**

தேசிய கடன் மீள் செலுத்தல் வேலைத்திட்டமொன்றை ஊக்குவிக்கவும், அதனுடன் இணைந்த கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகளை பலப்படுத்தவும் சர்வதேச நாணய நிதியம் வலியுறுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# அரிசி தட்டுப்பாடு இல்லை

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று(24) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார். நெற் பயிர்ச்செய்கையை விரிவுபடுத்தி அடுத்த வருடத்தில் அரசி இறக்குமதியை நிறுத்துவதே தற்போதைய அரசாங்கத்தின் நோக்கம் எனவும், உணவு, பணவீக்கப் பட்டியலில் இலங்கைக்கு 5ஆவது இடம் கிடைத்துள்ளமை கவலையளிப்பதாகவும் தெரிவித்தார்.

விவசாயிகளுக்கு தேவையான உரம், எரிபொருளுக்கான நிவாரணத்தை வழங்குமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். இம்மாத இறுதி வரையில் நாட்டில் அரிசிக்கான தட்டுப்பாடு ஏற்படாது. எவ்வாறாயினும் முழுமையாக அரிசி இறக்குமதியை நிறுத்துவதே எமது நோக்கமாகும் என்றார்.

# கெர்னருக்கான பிடியாணை...

ஜனாதிபதி சட்டத்தரணி ரியன்சி அர்செகுலேரத்ன மற்றும் சட்டத்தரணி உதார முஹந்திரம்கே ஆகியோருடன் பத்தும் கெர்னர், மன்றில் நேற்று (24) சரணடைந்தார்.

அடுத்த விசாரணைத் திகதி தொடர்பான தவறான புரிதல் காரணமாக தமது சேவை பெறுநரால், செவ்வாய்க்கிழமையன்று (23) நீதிமன்றில் ஆஜராக இயலவில்லை என பிரதிவாதியின் சட்டத்தரணி, மன்றுக்கு அறிவித்தார்.

நீதிமன்றில் மன்னிப்புக் கோரிய பத்தும் கெர்னர், அடுத்தடுத்த தவணைகளுக்கு ஆஜராவதாக உறுதியளித்ததைத் தொடர்ந்து, நீதிமன்றத்தை தவிர்க்க வேண்டாம் என்று அறிவுறுத்திய மேலதிக நீதவான் ஹர்ஷன கெகுனாவல, பிடியாணையை மீளப் பெற்றதுடன், நீதவான் விசாரணைக்கான தினமாக நவம்பர் 29ஆம் திகதியை நிர்ணியித்தார்.

கடந்த ஜூலை 13ஆம் திகதியன்று பொல்துவ சந்திக்கு அருகில் நடைபெற்ற போராட்டத்தின் போது இடம்பெற்ற வன்முறைகளில் பொதுச் சொத்து சட்டத்தின் கீழ் குற்றங்களை புரிந்தார் என்ற குற்றச்சாட்டில் பத்தும் கெர்னர் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சீனாவுக்கு வலியுறுத்து

கடன் மறுசீரமைப்பு விடயத்தில் சீனா மாறுபட்ட அணுகுமுறையை பின்பற்றுகின்றது. ஆகவே ஏனைய கடன் வழங்கும் நாடுகள் சீனாவுடன் எவ்வாறான இணக்கப்பாட்டிற்கு வரமுடியும் என்பதே முக்கியமான கேள்வியாக உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மக்களின் வாழ்க்கைத் தரத்தில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. அவர்களின் கொள்வனவு திறனில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. பொருளாதாரத்தின் வேகமான சுருங்குதலைத்தான் நாம் இப்போது காண்கிறோம். எனவே தங்கள் வாழ்க்கையை பாதிக்கும் பொருளாதாரம் குறித்து அக்கறை கொள்ள மக்களுக்கு உரிமை உள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்து சமுத்திரத்தில் புவிசார் அரசியல் நிலைமைகள் சூடுபிடித்துள்ளன, ஆனால் நாம் அதனை தவிர்ந்து நமது கடன் பிரச்சனையை முற்றிலும் பொருளாதார முறையில் அணுகுகின்றோம். ஆனால் கடன் எவ்வாறு கையாளப்படுகின்றது மற்றும் கடன் நிவாரணம் எவ்வாறு மேற்கொள்ளப்படுகின்றது என்பதில் சிக்கல்கள் இருக்கும். அவை சில புவிசார் அரசியல் தாக்கங்களைக் கொண்டிருக்கும் எனவும் அவர் சர்வதேச ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

# 367 பொருட்களின் இறக்குமதிக்கு...

நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளார்.

அந்நியச் செலாவணிக் கையிருப்பை முகாமைத்துவம் செய்யும் வகையிலேயே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சொக்கலேட், வாசனை திரவியங்கள், ஆண்கள் மற்றும் பெண்களின் உடைகள், உள்ளாடைகள், கைக்கடிகாரங்கள், மின் கேத்தல்கள் ஆகிவற்றின் இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

மர உற்பத்திகள் மற்றும் பலகைகள், சமையலை உபகரணங்கள், கழிவறை பேப்பர்கள், கைப்பைகள், பெல்ட், தொப்பிகள், கண்ணாடி மற்றும் அலுமினியம் உற்பத்திப் பொருட்கள், கத்தி, கரண்டி, கத்திரி மற்றும் பிளேட்களின் இறக்குமதிக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

குளிர்சாதனப் பெட்டிகள், குளிர்வளி பதனாக்கிகள், போக் லிப்ட், அறுவடை மெஷின் உள்ளிட்ட இயந்திரங்கள் உள்ளிட்ட 367 பொருட்களின் இறக்குமதி இடைநிறுத்தப்பட்டுள்ளது.

# ரோஹிதவின் ஹோட்டலுக்கு தீ வைத்த நால்வர் கைது

'கிரீன் எகோ லொட்ஜ்' ஹோட்டலில், மே மாதம் 10 திகதி பொருட்கள் திருடப்பட்டு தீ வைக்கப்பட்டது.

இந்த சம்பவம் தொடர்பில் கொலன்ன பிரதேசத்சைச் சேர்ந்த 25 மற்றும் 50 வயதுடைய 4 பேர் திங்கள் (22) மற்றும் செவ்வாய்க்கிழமை (23),கைது செய்ய்ப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மே 10 அன்று இடம்பெற்ற களேபரங்களின் போது, சொகுசு ஹோட்டல் தீக்கிரையாக்கப்பட்ட பின்னர், அந்த ஹோட்டல் மஹிந்த ராஜபக்ஷவின் மகன்களில் ஒருவருக்கு சொந்தமானது என்று தகவல்கள் வெளியாகின.

அந்த ஹோட்டல் யோஷித ராஜபக்ஷவுக்கு சொந்தமானது என சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்த நிலையில், அதனை அவர் நிராகரித்திருந்தார்.

அதன்பின்னர், மஹிந்தவின் மூன்றாவது மகனான ரோஹித ராஜபக்ஷவுக்கு குறித்த ஹோட்டல் சொந்தமானது என பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

தீ வைப்பு சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் சிலரை கைது செய்வதற்கான விசாரணைகளை கொலன்ன பொலிஸார் முன்னெடுக்கப்பட்டு வருகின்றனர்.

# டொலர் கட்டாயம் அனுப்பவேண்டும்

அதுதொடர்பில் நிதியமைச்சினால் சுற்றறிக்கை அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

ஆரம்பநிலை அதிகாரிகள் 100 அமெரிக்க டொலர்களையும், இரண்டாம் நிலை அதிகாரிகள் 200 டொலர்களையும், மூன்றாம் நிலை அதிரிகள் 300 டொலர்களையும் சிரேஷ்ட மட்ட அதிகாரிகள் 500 டொலர்களையும் மாதாந்தம் அனுப்பிவைக்கப்படவேண்டும் என்றும் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு வெளிநாட்டுக்குச் செல்வோர், இலங்கை வங்கி முறையின் ஊடாக தமது பெயரில் உள்ள வதிவிடமற்ற வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு பணத்தை அனுப்ப வேண்டும் எனவும் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இடைக்கால பட்ஜெட் செவ்வாயன்று உரை

பி.ப 1 மணி முதல் 2 மணிவரை ஜனாதிபதியினால் ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீடு முன்வைக்கப்படும். அதன் பின்னர் பாராளுமன்றம் மறுநாளுக்கு ஒத்திவைக்கப்பட்ட பின்னர், ஓகஸ்ட் 31 மற்றும் செப்டெம்பர் 1 ஆகிய தினங்களில் மு.ப 9.30 மணி முதல் பி.ப 5.30 மணிவரை இரண்டாவது வாசிப்பு மீதான விவாதம் மதியபோசன இடைவேளை இன்றி நடத்தப்படவுள்ளது.

> **நடத்தப்படவிருப்பதுடன், இதன் பின்னர் குழு நிலை மற்றும் மூன்றாவது வாசிப்பு இடம்பெற்று வாக்கெடுப்புக்கு விடப்படும்.**

அத்துடன், செப்டெம்பர் 02ஆம் திகதி மு.ப 9.30 மணி முதல் பி.ப 4.30 மணிவரை ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீட்டு விவாதம் நடத்தப்படவிருப்பதுடன், இதன் பின்னர் குழு நிலை மற்றும் மூன்றாவது வாசிப்பு இடம்பெற்று வாக்கெடுப்புக்கு விடப்படும்.

# நெருக்கடியை சமாளிக்கும் வேலைத்திட்டம் அவசியம்

இலங்கைக்கு வருகை தந்துள்ள சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை நேற்று (24) சந்தித்து கலந்துரையாடியுள்ளார். இந்த சந்திப்பு, ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று பிற்பகல் நடைபெற்றதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிகள் குறித்தும், இரு தரப்பினருக்கும் இடையில் முன்னெடுக்க எதிர்பார்க்கும் நிதி நிவாரண பொதி குறித்தும் இந்த சந்திப்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தையின் அடுத்த கட்ட சந்திப்பை, எதிர்வரும் 26 ஆம் திகதி நடத்துவதற்கு இதன்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது

அத்துடன், தொழிநுட்ப மட்டத்திலான பேச்சுவார்த்தையை, எதிர்வரும் நாட்களில் மத்திய வங்கி அதிகாரிகளுடன் மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. நேற்றைய சந்திப்பில், சர்வதேச நாணய நிதியத்தின் கலந்துரையாடல் குழுப் பிரதானி பீட்டர் ப்ரூயர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டதாக, ஜனாதிபதி ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்தது.

# கம்பஹாவில் பலி: காலியில் காயம்

இரண்டு துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களும் மோட்டார் சைக்கிளில் வந்த மர்ம நபர்களினாலேயே நடத்தப்பட்டுள்ளன

கம்பஹா, பட்டபொத்தவில் நேற்று பிற்பகல் வேளையில் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவரில் ஒருவர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில், 34 வயதான நபரொருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவத்தில் உயிரிழந்தவர், கட்டட பொருட்கள் விற்பனை செய்யும் கடையின் உரிமையாளர் என்றும் சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, காலி, அஹுங்கல்ல, கட்டுவில பிரதேசத்தில் நேற்று நண்பகல் மோட்டார் சைக்கிளில் வந்த இருவரால் நடத்தப்பட்ட இன்னொரு துப்பாக்கிப் பிரயோகத்தில் நபரொருவர் காயமடைந்துள்ளார்.

அஹுங்கல்ல, கல்வெஹர பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவரே காயமடைந்துள்ளார் என்றும் அவரின் நிலை கவலைக்கிடமாக இல்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானவர் தற்போது பலபிட்டிய ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்த சூட்டு சம்பவங்கள், பாதாள உலகக் குழுவின் செயல்களா என்பது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# நீதித்துறையை கடுமையாக...

அச்சுறுத்தல்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார். அரசாங்கத்தின் ஜனநாயக விரோத ஒடுக்குமுறைக்கு எதிராக எதிர்க்கட்சியில் உள்ள சக்திகளை வீதிக்கு இழுக்க வேண்டாம் என கேட்டுக் கொண்ட எதிர்க்கட்சித் தலைவர், இத்தருணத்தில் நாடாளுமன்றக் குழு அமைப்பின் மூலம் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு ஆதரவளிப்பது பொதுமக்களை மனதில் கொண்டேயாகும் எனவும் தெரிவித்தார்.

அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தை நேற்று (24) கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் சந்தித்ததுடன், இந்நாட்களில் முட்டைத் தொழில்துறை எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டன. அவர்களின் பிரச்சினைகள் மட்டுமன்றி பாவனையாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்தும் ஆராயப்பட்டன.

# ஸ்கொட்லாந்து...

முன்னெடுத்திருந்த நிலையில், அவர்கள் முன்வைத்துள்ள ஆதாரங்களின் அடிப்படையில் மீண்டும் விசாரணைகளை முன்னெடுக்க ஸ்கொட்லாந்து யார்ட் குழு இலங்கைக்கு வருகை தரவுள்ளதாகவும், ஜனாதிபதியும் அதற்கான இணக்கத்தை தெரிவித்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

# 13 ஆவதுக...

எதிர்வரும் நவம்பர் மாதம் 16 ஆம் திகதி இடம்பெறும் என்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அமல் ரணராஜா, நேற்று (24) அறிவித்தார்.

இந்த வழக்கு நேற்று (24) எடுத்துக்கொள்ளப்பட்ட போது, தமது சிரேஷ்ட வழக்குரைஞர் அஷான் பெர்னாண்டோ சுகயீனமடைந்துள்ளதால் மேலதிக சாட்சிய விசாரணைக்காக பிறிதொரு தினத்தை அறிவிக்குமாறு ஹிருணிக்கா சார்பில் ஆஜரான சட்டத்தரணி மன்றில் அறிவித்தார். அதன்போது, 2017ஆம் ஆண்டில் சாட்சிய விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட போதும் பல்வேறு காரணங்களுக்காக ஒத்திவைக்கப்படுவதாகவும் அதனால் விரைவில் சாட்சிய விசாரணையை ஆரம்பிக்க வேண்டும் என்றும் முறைப்பாட்டாளர் தரப்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் ஜனக பண்டார மன்றுக்கு அறிவித்தார்.

இருதரப்பு வாதங்களையும் கருத்திற் கொண்ட கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அமல் ரணராஜா, குறித்த சாட்சிய விசாரணை கிட்டத்தட்ட 13ஆவது தடவையாக ஒத்திவைக்கப்படுவதாக திறந்த நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டியதுடன், நவம்பர் 16ஆம் திகதியை மேலதிக சாட்சிய விசாரணைக்கான தினமாக அறிவித்தார்.

2015ஆம் ஆண்டு டிசெம்பர் 21ஆம் திகதியன்று, ஹிருணிகா எம்.பிக்குச் சொந்தமான டிபெண்டர் ரக வாகனத்தில் வந்து தெமட்டகொட பகுதியில் வைத்து இளைஞனொருவரைக் கடத்திய சம்பவம் தொடர்பில் ஹிருணிக்கா மற்றும் மெய்ப்பாதுகாவலர்கள் உட்பட 9 பேருக்கு எதிராக சட்டமா அதிபரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அந்த வழக்குடன் தொடர்புடைய எண்மர் தமது குற்றத்தை ஒப்புக் கொண்டதுடன், ஹிருணிகா எம்.பி தன்மீதான குற்றச்சாட்டை மறுத்திருந்தார். எண்மரில் ஒருவர் 18 வயதுக்குட்பட்ட பாடசாலை மாணவர் (8ஆவது குற்றவாளி) என்பதால் அவர் விடுவிக்கப்பட்டார்.

ஹிருணிகா பிரேமச்சந்திர மற்றும் பாடசாலை மாணவர் ஒருவரைத் தவிர, குற்றத்தை ஒப்புக்கொண்ட மற்ற ஏழு குற்றவாளிகளுக்கும் 12 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 2 வருட கடூழியச் சிறைத்தண்டனை விதித்து கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

மேலும், 2, 8ஆவது குற்றவாளிகள் தவிர அறுவருக்கு தலா 32,000 ரூபாய் தண்டப்பணம் விதித்ததுடன், தாக்கப்பட்ட நபருக்கு 285,000 ரூபாய் நட்டஈடு வழங்குமாறும் கட்டளையிடப்பட்டது.

# 24 மணிநேர பொறிமுறையை உடனடியாக உருவாக்கவும்

கடற்றொழில்சார் சட்ட விரோத செயற்பாடுகள் அனைத்தையும் கட்டுப்படுத்தும் வகையிலான 24 மணித்தியாலங்களும் செயற்படும் பொறிமுறை ஒன்றினை கடற்படையினருடன் இணைந்து உருவாக்குமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

கடற்றொழில் அமைச்சில் நேற்று (24) நடைபெற்ற கலந்துரையாடலின் போதே மேற்கண்டவாறு ஆலோசனை வழங்கியுள்ளார். இந்த கலந்துரையாடலில், கடற்றொழில் அமைச்சின் செயலாளர், கடற்றொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் உட்பட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்

இதேவேளை, மண்ணெண்ணெய் விநியோகம் மீண்டும் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில், நாடளாவிய ரீதியில் உள்ள கடற்றொழிலாளர்களுக்கும் மண்ணெண்ணெய் கிடைப்பதை உறுதிப்படுத்துவதுடன், அதுதொடர்பான



அறிக்கையினை தனக்கு சமர்பிக்குமாறும் கடற்றொழில் அமைச்சர், அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டார்.

அதேவேளை, கடலட்டை வளர்ப்பு தொடர்பாக குறித்த கலந்துரையாடலில் பிரஸ்தாபிக்கப்பட்ட நிலையில், இந்தியா மற்றும் சீனா போன்ற நாடுகளை சேர்ந்த தனியார் முதலீட்டாளர்கள் ஆர்வம் செலுத்தி வருகின்றமையினால், அவர்களைப் பயன்டுத்தி, உடனடித் தேவையாக எமக்கு இருக்கின்ற கடலட்டை குஞ்சு பொரிக்கும் நிலையங்களை நவீன தொழில்நுட்பத்துடன் உருவாக்க வேண்டும எனவும் கற்றொழல் அமைச்சர் தெரிவித்தார்.

### வன்முறைகளை தூண்டியவர்களுக்கு எதிராகவே

# பயங்கரவாத தடைச்சட்டம் பயன்படுத்தப்பட வேண்டும்

■ பா.நிரோஸ்

மே 9ஆம் திகதி நாட்டில் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறுவதற்கு முன்னர் அலரி மாளிகையில் உரையாற்றிய அரசியல் வாதிகளுக்கு எதிராகவே பயங்கரவாத தடைச்சட்டம் பயன்படுத்தப்பட வேண்டுமென ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று (24) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார். நாட்டில் உள்ள 22 மில்லியன் மக்களில் 60 இலட்ச மக்கள் ஒருவேளை மாத்திரமே உணவை உட்கொள்கிறார்கள். குறிப்பாக நாட்டிலுள்ள மத்திய வர்க்க மக்களின்



உணவுகளில் முட்டை, இறைச்சி, மீன் என்பன இப்போது இல்லை. மக்களின் உணவுத் தட்டுக்கு அரசாங்கம் அடித்துள்ளது என்றார்.

அமைதியான போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களுக்கு எதிராக பயங்கரவாத தடைச் சட்டத்தை அரசாங்கம் பயன்படுத்துவதை நாம் கடுமையாக எதிர்க்கிறோம். இதுவொரு தவறான செயற்பாடு. பயங்கரவாத தடைச்சட்டம் திருத்தப்பட வேண்டும். மே 9ஆம் திகதி நாட்டில் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறுவதற்கு முன்னர் அலரி மாளிகையில் உரையாற்றிய அரசியல்வாதிகளுக்கு எதிராகவே பயங்கரவாதத் தடைச் சட்டம் பயன்படுத்தப்பட வேண்டுமென கோரிநின்றார்.

# கழிவுகளை அகற்ற ரூ.90 கோடி செலவு

இலங்கை கடல் எல்லைக்குள் விபத்துக்குள்ளான எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் இருந்து வெளியான கழிவுப் பொருட்களை அகற்றுவதற்காக, 90 கோடியே 38 இலட்சத்து 57 ஆயிரத்து 293 ரூபாய் இதுவரை செலவாகியுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. இந்த கழிவுப் பொருட்கள் மன்னாரில் இருந்து ஹம்பாந்தோட்டை கிரிந்த வரையான கடற்பரப்பில் பரவியதாக அமைச்சு தெரிவித்துள்ளது.



சமுத்திர பாதுகாப்பு சம்மந்தமான நடவடிக்கைகளை எடுக்கும்போது, அதற்கான சட்ட ஏற்பாடுகள் போதுமானதாக இல்லை எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். இவ்வாறான சட்ட ஏற்பாடுகளை வலுப்படுத்துவதற்கு, நீதியமைச்சு மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் என்பவற்றுடன் இணைந்து துரிதமான நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பு துறைமுகத்தை அண்மித்த பகுதியில் எக்ஸ்ப்ரஸ் பேர்ல் கப்பல் 2021 ஜூன் மாதம் தீ விபத்துக்குள்ளாகியிருந்தது. இலங்கை கடற்பரப்பில் தீ விபத்துக்குள்ளான எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பலால் ஏற்பட்ட பாதிப்புகள் காரணமாக 473 கடல் உயிரினங்கள் உயிரிழந்துள்ளன. இதற்கமைய குறித்த பாதிப்புகளால் 417 ஆமைகளும், 48 டொல்பின்களும், 8 திமிங்கிலங்களும் உயிரிழந்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

### தடைசெய்யப்பட்ட முஸ்லிம் அமைப்புக்களிலிருந்து

# ஆறு அமைப்புக்களை நீக்குவது குறித்து ஆராய்வு

■ நூருல் ஹுதா உமர்

தடைசெய்யப்பட்ட முஸ்லிம் அமைப்புக்களிலிருந்து ஆறு அமைப்புக்களை நீக்குவது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் பணிப்புரைக்கு இணங்க ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதியின் சிரேஷ்ட பாதுகாப்பு ஆலோசகரும், ஜனாதிபதி அலுவலக பிரதானி சாகல ரத்நாயக்கவின் தலைமையில் நேற்று (24) இடம்பெற்ற பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகளுடனான கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ஹரீஸ் எம்.பி தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பதவியேற்ற முதல் வாரத்தில் தடைசெய்யப்பட்ட முஸ்லிம் அமைப்புக்களின் தடைகளை நீக்குவது தொடர்பில் நானும், இசாக் ரஹ்மான் எம்.பியும் ஜனாதிபதிக்கு கோரிக்கையை முன்வைத்தோம் என்றார்.

பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரிகள் மற்றும் புலனாய்வு பிரிவின் தலைவர்கள் பலரும் கலந்து கொண்டிருந்த இந்த கூட்டத்தில் தடைசெய்யப்பட்டுள்ள 11 முஸ்லிம் அமைப்புக்களிலிருந்து 06 அமைப்புக்களின் தடையை நீக்குவது தொடர்பில் பல்வேறு விடயங்களை கலந்துரையாடி அதற்கான மேலதிக நடவடிக்கைகளை பாதுகாப்பு துறையினர் மேற்கொண்டுள்ளனர்.

தடையை நீக்கவுள்ள ஆறு அமைப்புக்களின் பிரதிநிதிகளை தனித்தனியாக சந்தித்து பேச நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் துரிதகதியில் தடைநீக்க அறிவிப்பை வெளியிட பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் மேலும் தெரிவித்தார்.

# பயங்கரவாத தடைச் சட்டத்தை பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும்

## இலங்கை சட்டத்தரணிகள் சங்கம்

அரசியலமைப்பின் கீழ் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகளுக்கு அமைய செயற்படும் நபர்களுக்கு எதிராக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் அதிகாரங்களைப் பயன்படுத்துவதில் ஆபத்து இருப்பதாக சுட்டிக்காட்டியுள்ள இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், பயங்கரவாத தடைச் சட்டத்தைப் பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் நிறைவேற்று மற்றும் சட்டத்தை அமுல்படுத்தும் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சட்டத்தரணி சாலிய பீரிஸ் மற்றும் செயலாளர் இசுரு பாலபட்டபெந்தி ஆகியோரின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ள இந்த அறிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதானது,

பயங்கரவாத தடைச் சட்டம், மக்களைக் கைது செய்து நீண்டகாலம் தடுத்து வைப்பதற்கு நிறைவேற்று அதிகாரிகளுக்கு ஏற்பாடுகளை வழங்கும் கொடூரமான சட்டமாகும். பயங்கரவாதத்தை தடுப்பதில் பயங்கரவாதம் தொடர்பில் தெளிவான வரையறை பயங்கரவாத சட்டத்தில் இல்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

அரசியலமைப்பு மக்களுக்கு தமது கருத்துக்களையும் அமைதியான முறையில் பேசுவதற்கும் உரிமை வழங்கியுள்ளது என சுட்டிக்காட்டியுள்ள சட்டத்தரணிகள் சங்கம், அவ்வாறான கருத்துக்களை சட்டரீதியாக வெளிப்படுத்துவதை நசுக்குவதற்கும் இலக்கு வைப்பதற்கும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை தவறாகப் பயன்படுத்துவதற்கான பாரிய ஆபத்து காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளது.

# சரணடைந்த அருட்தந்தை ஜீவந்த பீரிஸ்க்கு பிணை

## ஜோசப் ஸ்டாலின் உட்பட 9 பேருக்கும் பிணை



தனக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மூன்றாவது வழக்குக்காக, கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் "கோட்டா கோ கம" போராட்டத்தளத்தின் தீவிர உறுப்பினரான அருட்தந்தை ஜீவந்த பீரிஸ், சரணடைந்ததை அடுத்து, அவரை பிணையில் விடுவிக்குமாறு கோட்டை நீதவான் திலின கமகே, நேற்று (24) உத்தரவிட்டார்.

அத்துடன், வழக்கு தொடர்பில் ஆஜராகியிருந்த இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதம செயலாளர் ஜோசப் ஸ்டாலின், துமிந்த நாகமுவ உள்ளிட்ட 09 சந்தேகநபர்களையும் 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான சரீரப் பிணையில் விடுவிக்குமாறு நீதவான் உத்தரவிட்டாரி.

அருட்தந்தை ஜீவந்த பீரிஸ், ஜோசப் ஸ்டாலின், துமிந்த நாகமுவ உட்பட 10 பேர் ஜனாதிபதி செயலகத்துக்குள் பலவந்தமாக பிரவேசித்து ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டனர் என்று கொழும்பு வடக்கு குற்றவியல் விசாரணைப் பிரிவினரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு தொடர்பில், ஜனாதிபதி சட்டத்தரணி ரியன்சி அர்செகுலேரத்ன மற்றும் சட்டத்தரணி உதார முஹந்திரம்கே ஆகியோர் ஊடாக மன்றில் சரணடைந்த அருட்தந்தையும் 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

காலி முகத்திடலில் இடம்பெற்ற போராட்டங்கள் குறித்து, கோட்டை மற்றும் கொம்பனித் தெரு பொலிஸாரால் தனித்தனியான பி அறிக்கைகள், அருட்தந்தைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

காலி முகத்திடலில் இடம்பெற்ற போராட்டங்கள் தொடர்பில் பொலிஸாரும் முப்படையினரும் தம்மை கைது செய்வதை தடுக்குமாறு உத்தரவிடக் கோரி, அருட்தந்தை ஜீவந்த பீரிஸ் உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமைகள் மீறல் மனுவொன்றையும் தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### கோப், கோபா தலைவர்கள் நியமனத்தில்

# நிலையியற் கட்டளைகளை மீற முடியாது



பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளுக்கு அப்பால் சென்று பொது கணக்குகளுக்கான குழு (கோபா) பொது நிறுவனங்களுக்கான குழு (கோப்) ஆகிய குழுக்களின் தலைவர் பதவிகளுக்கு பாராளுமன்ற உறுப்பினர்களை நியமிப்பதற்கான யோசனை முன்வைக்கப்பட்டமைக்கு, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் எம்.பி கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்திலேயே சாகர மேற்கண்டவாறு எதிர்ப்பை வெளியிட்டுள்ளார். இவ்விரு குழுக்கள் நியமிக்கப்படுவதற்கு முன்னர் அக் குழுக்களின் தலைவர் பதவிகளுக்கு இரு பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களை ஐக்கிய மக்கள் சக்தி முன்மொழிந்துள்ளது. பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கு அமைய இவ்வாறு செயற்பட முடியாது என்றார்.

முதலில் கோப், கோபா குழுக்களுக்கான உறுப்பினர்களை நியமித்து, அந்த உறுப்பினர்களின் பெரும்பான்மையானோர் விரும்பும் எம்.பியை தலைவராக நியமிக்க வேண்டும் என்றே நிலையியற் கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, ஒவ்வொருவருக்கும் ஏற்ற வகையில் தலைவர் பதவிகளை வழங்க முடியாது எனவும் சாகர காரியவசம் தெரிவித்தார்.

# நீக்கியிருந்தால் யுத்தத்தை வென்றிருக்க முடியுமா?

■ பா.நிரோஸ்



பிரபாகரன் மக்களைக் கொன்றொழித்த போது பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்க வேண்டுமென சர்வதேசம் நாட்டுக்கு அழுத்தங்களை வழங்கியது. அப்போது பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கியிருந்தால் யுத்தத்தை வென்றிருக்க முடியுமா என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் டி.பி.ஹேரத் கேள்வி எழுப்பினார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று (24) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார். பயங்கரவாத தடைச் சட்டத்தை பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனை சர்வதேசமும், உள்நாட்டிலும் பலர் விமர்சிக்கிறார்கள். தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் நாட்டு மக்களைக் கொன்றொழித்தபோது பயங்கரவாத தடைச் சட்டம் பயன்படுத்தப்பட்டது.

அப்போதும் மனித உரிமைகள் மீறப்படுவதாகத் தெரிவித்து இச்சட்டத்தை நீக்க வேண்டுமென சர்வதேச நாடுகள் அழுத்தங்களை வழங்கின. அப்போது பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கியிருந்தால் யுத்தத்தை வென்றிருக்க முடியுமா? எனவே, இச்சட்டம் பயன்படுத்த வேண்டிய சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்படும் என்றார்.

### ஆளும், எதிர்க்கட்சியினருக்காக

# பாராளுமன்றம் செல்கிறார் ஆளுநர்

மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்கவின் தலைமையில் தற்போதைய பொருளாதார நிலைமைகள் தொடர்பில் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்களைத் தெளிவுபடுத்தும் விசேட நிகழ்ச்சி எதிர்வரும் 30ஆம் திகதி பி.ப 2.00 மணி முதல் பி.ப 4 மணிவரை பாராளுமன்ற கட்டிடத்தொகுதியில் இடம்பெறவிருப்பதாக சபைமுதல்வர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். ஆளும் கட்சி



எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் இதில் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, நிலையியற் கட்டளைகளில் திருத்தம் செய்து துறைசார் மேற்பார்வைக் குழுக்களை உடனடியாக நியமிக்கவுள்ளதாகவும் சபை முதல்வர் தெரிவித்தார். ஜனாதிபதியின் யோசனைக்கு அமைய பாராளுமன்ற குழு முறையை பலப்படுத்தி மேலும் மூன்று நிலையியற் குழுக்கள் ஸ்தாபிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

### பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ்

# அமரவீரவை கைது செய்க

■ பா.நிரோஸ்

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு சென்று தூங்கப்போவதாக கூறும் அமைச்சர் மஹிந்த அமரவீரவையும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்ய வேண்டுமென ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கபிர் ஹாசீம் தெரிவித்தார். எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று (24) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார். ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தொலைக்காட்சி ஒன்றுக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளார். ஊடகங்கள் மீது ஆளுந்தரப்பினரால் மேற்கொள்ளப்படும் அச்சுறுத்தல்களை அனுமதிக்க முடியாது என்றார்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு முன்பாக சென்று தூங்கப்போவதாக அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். வசந்த முதலிகேவை பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்ய முடியும் என்றால், மஹிந்த அமரவீரவையும் கைது செய்ய முடியாது என்றும் கேள்வியெழுப்பினார்.

பயங்கரவாத தடைச் சட்டத்தை மறுசீரமைக்கப்போவதாக அரசாங்கம் கூறுகிறது.



இதனையே நாம் நல்லாட்சி அரசாங்கத்தில் செய்ய முயன்றோம்.சாதாரண சட்டதிட்டங்களுக்கு அமைய எவரையும் கைது செய்யலாம். பயங்கரவாதிகளுக்கு எதிராக பயன்படுத்த வேண்டிய பயங்கரவாத தடைச் சட்டத்தை சாதாரண மக்களுக்கு எதிராக அரசாங்கம் பயன்படுத்துகின்றது என்றார்.

காத்தான்குடியில் மீனவர்களின்

# தகவல்கள் திரட்டு

■ எம்.எஸ்.எம்.நூர்தீன்

காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவில் மீன்பிடித் தொழில் சம்பந்தமான மீனவர்களின் தகவல்களை திரட்டும் நடவடிக்கை, நேற்று புதன்கிழமை (24) நடைபெற்றது.

காத்தான்குடி பிரதேச செயலாளர் யு.உதய சிறீதரின் வழிகாட்டலிலும் ஆலோசனையிலும் கூகுள் படிவத்தின் ஊடாக இந்தத் தகவல் திரட்டும் நடவடிக்கை இடம்பெற்றது.

இதன் முதல் நடவடிக்கையாக காத்தான்குடி கடலில் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டு வரும் காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவில் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டு வரும் மீனவர்களின் தகவல்கள் திரட்டப்பட்டன.



காத்தான்குடி பிரதேச செயலாளர் யு.உதய சிறீதரின் தலைமையில் நடைபெற்ற இந்தத் தகவல் திரட்டும் நடவடிக்கையில் குறித்த பகுதியின் கிராம உத்தியோகத்தர்கள், கரையோரம் பேணல் திணைக்கள உத்தியோகத்தர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், காத்தான்குடி நகர சபை ஊழியர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், காத்தான்குடி பொலிஸார் ஈடுபட்டனர்.

இதன்போது மீனவர்களின் விவரங்கள், அவர்களின் மீன்பிடி வாடிகள் உட்பட பல்வேறு தகவல்கள் திரட்டப்பட்டதுடன், அவர்களின் மீன்பிடி வாடிகளுக்கு இலக்கங்களும் வழங்கப்பட்டன.

கல்முனை

## ஹுதா பள்ளிவாசலில் இரத்ததான முகாம்

■ நூருல் ஹுதா உமர்

கல்முனை, ஹுதா ஜும்ஆ பள்ளிவாசல் வழிகாட்டலில், தஃவாக்குழுவின் ஏற்பாட்டில், இரத்ததான முகாம், எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (28) காலை 08.30 மணிக்கு கல்முனை ஹுதா ஜும்ஆ பள்ளிவாசலில், பள்ளிவாசல் தலைவர் ஏ.வி.எம். இப்றாஹீம் தலைமையில் நடைபெறவுள்ளது.

கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் இரத்த வங்கியில் ஏற்பட்டுள்ள இரத்தத் தட்டுப்பாட்டை நிவர்த்திக்கும் பொருட்டே நிர்வாகத்தினர் மற்றும் தஃவாக் குழுவினரின் முழுமையான பங்களிப்புடன் இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்விரத்ததான முகாமின் ஆரம்ப நிகழ்வுக்கு கல்முனை தலைமையக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீர், கல்முனை இராணுவ படை முகாம் 18ஆவது விஜயபாகு பாபல ரஜிமேந்து அதிகாரி கொமாண்டர் எஸ். ஆர்.கே.டி.சிறிசேன மற்றும் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் வைத்திய அத்தியேட்சகர் ஏ.எல்.எப். றஹ்மான் உட்பட உலமாக்கள் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த இரத்ததான முகாமில் கல்முனை வாழ் ஆண்கள், பெண்கள், இளைஞர்கள், விளையாட்டுக் கழகங்களின் உறுப்பினர்கள், பொது அமைப்புக்கள் மற்றும் பொதுமக்கள் என அனைவரும் கலந்துகொண்டு இரத்ததானம் வழங்க முன்வர வேண்டுமென ஏற்பாட்டாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அத்தோடு, மேலதிக விவரங்களைப்பெற தஃவாக் குழுவினரின் 0760123242, 0771336317 ஆகிய இலக்கங்களுடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பொன். செல்வநாயகம் எழுதிய

## மட்டக்களப்பு தமிழக பாரம்பரிய மருத்துவம்

### நூல் வெளியீடு

■ அதிரன்




தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிழக்கு மாகாணப் பணிப்பாளராகவும், கிழக்கு மாகாண பாலர் பாடசாலைப் பணியகத்தின் தவிசாளராகவும் பணியாற்றிய செட்டிபாளையத்தைச் சேர்ந்த பொன் செல்வநாயகம் எழுதிய மட்டக்களப்பு தமிழக பாரம்பரிய மருத்துவம் நூள் வெளியீடு, மட்டக்களப்பு தேவநாயகம் மண்டபத்தில், எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (28) காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு, வவுனியா மாவட்ட வைத்தியசாலை வைத்திய நிபுணர் வ.வரணிதரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

எழுத்தாளர் ஊக்குவிப்பு மைய வெளியீடாக வெளிவரும் இந்த புத்தக வெளியீட்டு நிகழ்வில், முதன்மை அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சி.சந்திரகாந்தன், கோ.கருணாகரம், மாவட்டச் செயலாளர் க.கருணாகரன் மற்றும் மட்டக்களப்பு மாநகர ஆணையாளர் தி.சரவணபவான் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

**“ எதிர்கால இளைஞர் சமூதாயத்துக்கும் தெரியப்படுத்தும் நோக்கில், மட்டக்களப்பு தமிழக பாரம்பரிய மருத்துவம் புத்தகமானது அமைந்துள்ளது**



மறைந்து போன கிராமிய பாராம்பரிய வைத்திய முறைகளை இன்றைய இளைஞர் சமூகத்துக்கும், எதிர்கால இளைஞர் சமூதாயத்துக்கும் தெரியப்படுத்தும் நோக்கில், மட்டக்களப்பு தமிழக பாரம்பரிய மருத்துவம் புத்தகமானது அமைந்துள்ளது.

வாழைச்சேனை முஹைதீன் ஜும்ஆப்

## பள்ளிவாசலுக்கு புதிய நிர்வாகிகள்

■ எச்.எம்.எம்.பர்ஸான்

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட வாழைச்சேனை முஹைதீன் ஜும்ஆப் பள்ளிவாசலுக்கு புதிய நிர்வாகிகளை தெரிவு செய்யும் நிகழ்வு, நேற்று முன்தினம் (23) நடைபெற்றது.

வாழைச்சேனை முஹைதீன் ஜும்ஆப் பள்ளிவாசலின் நிர்வாக கட்டுப்பாட்டின் கீழுள்ள எட்டு பள்ளிவாசல்களின் 44 உறுப்பினர்களின் பங்குபற்றுதலுடன் புதிய நிர்வாக தெரிவு நடைபெற்றது.

இதில், தலைவராக தொழிலதிபர் எம்.ஐ.சீனி முகம்மத், செயலாளராக ஓய்வுபெற்ற கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். கே.றகுமான், பொருளாளராக அனர்த்த முகாமைத்துவ அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஏ.அஸ்ரப் ஹுஸைன், உப தலைவராக பொலிஸ் அதிகாரி ஏ.அமீர் அலி, உப செயலாளராக சட்டத்தரணி ஐ.ஏ.றஸ்மி ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த நிர்வாக கட்டமைப்பின் கீழ் கல்வி, கலாசாரம், காணி என்பவற்றுக்கு தனித்தனிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





## சமுர்த்தி வீட்டுக்கான அங்குரார்ப்பணம்

■ ஹஸ்பர்

திருகோணமலை - தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதியில் உள்ள சமுர்த்தி திணைக்களம் ஊடாக புதிய வீட்டு நிர்மாணத்துக்கான அடிக்கல் நடும் வைபவம் நேற்று (24) நடைபெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதியின் வழிகாட்டுதலுக்கிணங்க, குறித்த வீட்டுத் திட்ட நிர்மாணிப்புக்கான அங்குரார்ப்பண வைபவம் நடைபெற்றது. இதில் சமுர்த்தி தலைமை முகாமையாளர் ஏ.ஆர். எம்.சித்திக், வங்கி முகாமையாளர் எம்.ஏ.ஹிஸ்புல்லா, திட்ட உதவியாளர் எம்.ஏ.எம்.நஜீப் உட்பட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பயனாளிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

மீரா நகர், சிராஜ் நகர் கிராம உத்தியோகத்தர் பிரிவில் தலா ஆறு இலட்சம் ரூபாய் செலவில் புதிய வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன.




மக்கள் குரல் ஓய்ந்திருந்ததே தவிர

# ஒரு காலமும் ஒடுங்கவில்லை

### நெடுங்கேணியில் போராட்டம்

■ க.அகரன்

கௌரவமான உரிமையுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும் என்னும் தொனிப்பொருளில், வட, கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் அனுசரணையோடு நீதிக்கான மக்கள் அமைப்பினால் நெடுங்கேணி கந்தசாமி கோவில் முன்றலில் கவனயீர்ப்பு போராட்டம் , நேற்று (24) முன்னெடுக்கப்பட்டது.

நிரந்தரமான அரசியல் தீர்வை வலுயுறுத்தி இடம்பெற்று வரும் 100 நாட்கள் செயற்றிட்டத்தில் 24ஆவது நாளான நேற்றைய போராட்டத்தில் தமது கோரிக்கைகளை ஊடகங்கள் வாயிலாக தெரிவித்திருந்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், “கௌரவமான உரிமைக்கான மக்கள் குரல்”, “மக்கள் குரல் ஓய்ந்திருந்ததே தவிர ஒருகாலமும் ஒடுங்கியிருக்கவில்லை” மற்றும் “ஜனநாயக பாதையில் மக்களே மக்களுக்காய்” போன்ற வாசகங்கள் தாங்கிய பதாதைகளை ஏந்தியிருந்தனர்.






அத்தோடு, வவுனியாவின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் குறித்த போராட்டத்தில் பொதுமக்கள் பலர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



கொடிகாமம் நோக்கி

## பஸ்ஸில் பயணித்த மூதாட்டி உயிரிழப்பு

■ எம்.றொசாந்த்

யாழ்ப்பாணத்தில் இருந்து பஸ்ஸில் கொடிகாம சந்தைக்கு தேங்காய் கொள்வனவு செய்ய சென்ற மூதாட்டி திடீரென உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் - குருநகர் பகுதியை சேர்ந்த செபநாயகம் செல்வமலர் (வயது 64) என்பவரே உயிரிழந்துள்ளார்.

மூதாட்டி, நேற்று முன்தினம் (23) பஸ்ஸில் பயணித்துக்கொண்டிருந்த வேளை, திடீரென நெஞ்சு வலி ஏற்பட்டு பஸ்ஸுக்குள் மயங்கி சரிந்துள்ளார்.

அதனை அடுத்து சாரதி பஸ்ஸிலேயே மூதாட்டியை சாவகச்சேரி வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போதிலும் , மூதாட்டி ஏற்கெனவே உயிரிழந்து விட்டார் என வைத்தியர்கள் அறிக்கையிட்டனர்.

அதையடுத்து மூதாட்டியின் சடலம், உடற்கூற்று பரிசோதனைக்காக சாவகச்சேரி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

யாழ்.ராணியில் பயணித்தவர்கள்

## பளையில் இறங்கி தப்பியோட்டம்

■ மு.தமிழ்ச்செல்வன்

யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி நோக்கி நேற்று (24) காலை பயணித்த உத்தியோகத்தகர்கள் சிலர், பளை ரயில் நிலையத்தில் இடைநடுவில் இறங்கி தப்பியோடியுள்ள சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வழமை போல் யாழ். ராணி ரயிலில் கிளிநொச்சி நோக்கிப் பயணித்த உத்தியோகத்தர்களில் சிலர் பயணச் சீட்டு பெற்றுக்கொள்ளாது பயணித்துள்ளனர்.

மிக குறைந்த கட்டணமாக உள்ள போதும் அதனை பெற்றுக்கொள்ளாது அவர்கள் பயணித்துள்ளனர்.

இந்நிலையில், நேற்றைய தினம் பயணச் சீட்டு பரிசோதனை செய்யும் ரயில் திணைக்கள அதிகாரிகள், பயணிகளிடம் பரிசோதனைகளை மேற்கொண்ட போது, ஒரு சிலர் பயணச்சீட்டு இன்றி பயணித்தமை கண்டுபிடிக்கப்பட்டு அவர்களிடம் பயணக் கட்டணமும் அபராதத் தொகையும் அறவிடப்பட்டது.

அத்தோடு, மூன்றாம் வகுப்புக்கு பயணச் சிட்டையை பெற்றுவிட்டு, இரண்டாம் வகுப்பில் பயணித்தவர்களும் எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், கிளிநொச்சி நோக்கிப் பயணித்த மேலும் சிலர், ரயில் திணைக்கள அதிகாரிகளின் பரிசோதனைக்கு முன்பாகவே இடைநடுவில் பளை ரயில் நிலையத்தில் இறங்கி சென்றமையையும் அவதானிக்க முடிந்ததாக மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.




## சட்டவிரோதமாக சிகரெட் விற்பனை

### ஒருவர் கைது

■ வி.நிதர்ஷன், எம்.றொசாந்த்

காரை நகரில் சட்டவிரோதமாக சிகரெட் விற்பனை செய்த குற்றச்சாட்டில் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் ஒருவர் செய்யப்பட்டுள்ளார்.

காரைநகர் பகுதியில் வெளிநாட்டில் இருந்து கொண்டுவரப்பட்ட சிகரெட்டை திருட்டுத்தனமாக விற்பனை செய்த காரைநகரை சேர்ந்த நபரே, பொலிஸ் விசேட அதிரடிப் டையினருக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவரிடமிருந்து 1,200 சிகரெட்கள் மீட்கப்பட்டுள்ளதோடு, கைது செய்யப்பட்ட நபர், ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு, ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார்.







அம்பேவல வாவியில் மிதக்கும்

# மரைகளின் உடலங்களை அப்புறப்படுத்த நடவடிக்கை

■ ரஞ்சித் ராஜபக்ஷ

மரைகளின் சடலங்களை விரைவாக அப்புறப்படுத்த நடவடிக்கை எடுப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த வாவியில் அதிகமான மரைகள் உயிரிழந்த நிலையில் கிடப்பதாகவும் இவற்றை விரைவாக அகற்றுவது அவசியம் என்றும் நுவரெலியா பொலிஸ் உதவி அத்தியட்சகர் சமந்த ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

இந்த வாவியில் மரைகளின் உடலங்கள் மிதப்பதாக அம்பேவல பொலிஸ் நிலை பொறுப்பதிகாரி தெரிவித்த தகவலுக்கமைய, உதவி பொலிஸ் அத்தியட்சகர் உள்ளிட்ட நுவரெலியா பொலிஸார், சம்பவ இடத்துக்குச் சென்று, அங்கு மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களிடம் விசாரணையை முன்னெடுத்தனர்.

இந்த விசாரணைகளின் பின்னர், இது தொடர்பில் கருத்து தெரிவித்த உதவி பொலிஸ் அத்தியட்சகர், ஹோட்டன் சமவெளி சுற்றாடல் மற்றும் அம்பேவல பகுதிகளில் உலவும் மரைகள் வேட்டைக்காரர்களால் வலைகளில் சிக்கும் அதேவேளை, உணவு , நீர் தேடி அம்பேவல வனத்துக்குள் வரும் மரைகள் வேட்டை நாய்களின் கடிக்கு இலக்காகி, வாவிக்குள் பாய்வதாகவும் தெரிவித்தார்.

இதன் பின்னர் நீரிலிருந்து வெளியே வர முடியாமல் நீரில் மூழ்கி மரைகள் உயிரிழப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

996 ஏக்கர் பரப்பில் உள்ள குறித்த வாவியில் பலர் சட்டரீதியாக மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவதாகவும் கடந்த இரண்டு மாதத்துக்குள் பாரியளவு மரைகள் வாவியில் இறந்து மிதப்பதால் நீர் பாரியளவில் மாசுற்றுள்ளதுடன் மீன்பிடி நடவடிக்கையும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தனர்.

இதேவேளை, அம்பேவல வனத்துக்குள் அநாதரவான சுமார் 30 வேட்டை நாய்கள் சுற்றித் திரிவதாகவும் இவை வனத்திலுள்ள மான், மரை, முயல்களை வேட்டையாடுவதாகவும் இந்த வனத்துக்குள் நுழைபவர்கள் சாதாரணமாகவே குறித்த வேட்டை நாய்களை அவதானிக்கலாம் என்றும் தெரிவித்தனர்.

இவ்வாறு மரைகள் உயிரிழக்கின்றமை தொடர்பில், வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கு அறிவித்ததையடுத்து, சம்பவ இடத்துக்கு விரைந்து அதிகாரிகள் விசாரணைகளை முன்னெடுத்த போதிலும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை என தெரிவித்தனர்.

தற்காலிக பாலத்தால் 150 குடும்பங்கள் பாதிப்பு

## தமக்கான நிரந்தர பாலத்தையும் கோருகின்றனர்

■ எம். குமார்

பலாங்கொடை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட வெல்லவல தொண்டமான்புர ஏ மற்றும் சி பிரிவுகளில் வசிக்கும் சுமார் 450 பேர் நிரந்த பாலமொன்று இன்மையால் பாரிய இன்னல்களை எதிர்கொண்டுள்ளனர்.

அப்பகுதியிலிருந்து தொழிலுக்கும் பாடசாலைகளுக்கும் செல்வோர் வெவள் தோல ஆற்றை தந்காலிக பாலமொன்றின் ஊடாக கடந்தே தமது அன்றாட செயற்பாடுகளை முன்னெடுத்து வந்தனர்.

எனினும், அதிக மழைப் பெய்யும் காலங்களில் பாலம் நீரில் அடித்துச் சென்று விடுவதாகவும் தெரிவிக்கின்றனர். இவ்வாறு ஒவ்வொரு தடவையும் பாலம் நீரில் அடித்துச் செல்லும் போது, பலகைகளைக் கொண்டு பாலமொன்றை நிர்மாணித்து பயன்படுத்தி வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

பாலம் இல்லாவிட்டால் சுமார்



ஒரு கிலோ மீட்டர் தூரம் கடந்து, வெல்லவல பகுதிக்கு வர வேண்டுமென்று தெரிவிக்கின்றனர்.

இந்த பாலம் தொடர்பில் உரிய அதிகாரிகளுக்கு தெரிவித்த போதிலும் இதுவரையிலும் அதிகாரிகள் எவரும் கவனம் செலுத்தவில்லை என தெரிவித்தார்கள்.

எனவே, 450 பேர் பயன்படுத்தும் தற்காலிக பாலத்துக்கு பதிலாக தரமான புதிய பாலமொன்றை நிர்மாணித்து தர அதிகாரிகள் முன்வரவேண்டுமென கோரிக்கை விடுக்கின்றனர்.

ஜப்பான், கொரிய மொழியறிவு தொடர்பான

## தெளிவூட்டல் கருத்தரங்கு

■ பி.கேதீஸ்

ஜப்பான் மற்றும் கொரிய நாடுகளில் வேலைவாய்ப்பினை பெற்றுக்கொள்வதற்கு ஜப்பான் , கொரிய மொழியறிவு தொடர்பான தெளிவூட்டல் கருத்தரங்கு ஒன்று ஹட்டனில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வானது, எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 3ஆம் திகதி காலை 10 மணியளவில் ஹட்டன் -தொண்டமான் தொழிற்பயிற்சி நிலைய கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

ஜப்பான்,கொரிய மொழிகளில் மிகவும் தேர்ச்சி பெற்ற வளவாளர்களால் இந்த கருத்தரங்கு நடாத்தப்படுவதுடன், இந்த பாடநெறியானது பகுதி நேர கற்கை நெறியாக எதிர்வரும் நாட்களில் ஹட்டன் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தில் நடைபெற உள்ளது.

பயிற்சி நெறி கட்டணங்கள் மற்றும் மேலதிக விபரங்களுக்கு வதிவிட முகாமையாளர், ஹட்டன் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையம் 0512222762/ 0512223492 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தின் வதிவிட முகாமையாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இராகலையில்

## ஈஸிகேஸ் முறையின் ஊடாக பணம் மோசடி செய்தவர் கைது

■ ஆ.ரமேஸ்

ஈஸிகேஸ் முறை மூலம் ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேல் பண மோசடியில் ஈடுப்பட்ட குற்றச்சாட்டில் ஈடுபட்ட ஒருவர், இராகலை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

32 வயதுடைய சந்தேகநபர் நேற்று முன்தினம் (23) மாலை கைது செய்யப்பட்டுள்ளார். இவ்வாறு கைது செய்யப்பட்டவர், லிந்துலை -ஹென்போல்ட் பகுதியை சேர்ந்தவர் என தெரியவந்துள்ளது.

சந்தேக நபர் தான், டயலொக் கம்பனியில் வேலை செய்வதாகத் தெரிவித்து, கையடக்க தொலைபேசியில் இராகலை கோணப்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவருடன், இரண்டு வாரத்திற்கு முன் தொடர்பு கொண்டுள்ளார்.

இதன்போது, டயலொக் வாடிக்கையாளரான தங்களுக்கு பணப் பரிசு கிடைக்கப்பட்டுள்ளது இப் பரிசுத் தொகையை பெற்றுக்கொள்ள ஒரு இ லட்சம் ரூபாவை ஈஸி கேஸ் மூலம் அனுப்புங்கள் என தெரிவித்துள்ளார்.

இதையடுத்து குறித்த நபர் ஈஸி கேஸ் மூலமாக பணத்தை அனுப்பி வைத்துள்ளார். இறுதியில் பரிசும் கிடைக்கவில்லை. சந்தேகநபரின் தொலைபேசியும் இயங்கவில்லை என தெரிவித்து, பாதிக்கப்பட்டவர் இராகலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். இதனையடுத்து சந்தேகநபரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

மேலும் தனக்கு இனந்தெரியாத நபர் ஒருவர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தங்களுக்கு டயலொக் நிறுவனத்தில் தொழில் வழங்கப்பட்டுள்ளது என கூறி, பாதிக்கப்பட்ட நபரின் கையடக்க தொலைபேசி இலக்கத்தை வழங்கி, பண பரிசு கிடைத்துள்ளது அதை பெற ஒரு இலட்சம் ரூபாவுக்கு அதிகமான தொகையை ஈஸி கேஸ் மூலம் அனுப்பும்படி அறிவிக்குமாறு தெரிவிக்கப்பட்டதால், தான் இதை அறிவித்து ஈஸி கேஸ் மூலம் அனுப்பிய பணத்தை பெற்றதாக விசாரணையில் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து, பணமாக ஒரு சிறிய தொகை தனக்கு வழங்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நடத்தும் இராகலை பொலிஸார், சந்தேகநபரை வலப்பனை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.





## சத்துணவுத் திட்டம் ஆரம்பம்



சங்கராஜா நினைவு அறக்கட்டளை அமைப்பின் ஊடாக, நு/காலிபேக் தமிழ் வித்தியாலத்தில் முதல் கட்டமாக 650 மாணவர்களுக்கான சத்துணவு வழங்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.
இந்நிகழ்வில், நுவரெலியா கல்வி பனிமனையில் இருந்து உதவி கல்வி பணிப்பாளர் செல்வராஜ் சிறப்பு அதிதியாக கலந்து கொண்டார்.

(டி சந்ரு )

மாத்தளை ஆதார வைத்தியசாலையில்

## சிரமதானப் பணி முன்னெடுப்பு



■ ஏ.எம்.ஜலீல்

மாத்தளை ஆதாரவைத்தியசாலையின் வெளி நோயாளர்களது வார்ட் தொகுதி, சிரமதான முறையில் துப்புரவு செய்யப்பட்டு வர்ண பூச்சும் பூசப்பட்டது. உக்குவளை- மாருகொன வாழ் நலன்விரும்பிகளால் இந்த சிரமதான பணி முன்னெடுக்கப்பட்டது. அத்துடன், நலன்விரும்பி ஏ.சீ. எம்.உபைதுல்லாஹ்வினால் சக்கர கதிரையொன்றும் இந்த வைத்தியசாலைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டது .

இ.போ.ச பஸ் சேவை

## மூன்று மாதங்களாக இடைநிறுத்தம்

### பயணிகள் அசௌகரியம்

■ எம்.குமார்

இறக்குவானை-பொத்துப்பிட்டிய பிரதான வீதியினுடாக கடந்த காலங்களில் போக்குவரத்து சேவையில் ஈடுப்பட்டு வந்த இலங்கை போக்குவர்த்து சபைக்கு உட்பட்ட இரண்டு பஸ்களும் கடந்த மூன்று மாதங்களாக சேவையில் ஈடுப்படாததால் அந்த வீதியினுடாக பயணிக்கும் பயணிகள், மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

கடந்த காலங்களில் இரண்டு தனியார் பஸ்களும் இரண்டு இ.போ.ச பஸ்களும் குறித்த வீதியில் சேவையில் ஈடுப்பட்டு வந்தன. எனினும் கடந்த



மூன்று மாதங்களாக இ.போ.ச பஸ்கள் இரண்டும் சேவையிலிருந்து விலகியுள்ளன. இதனால் மாணவர்கள் பாடசாலைக்கு காலை வேளையில் செல்வது தாமதமாவதுடன், வீட்டுக்கு வருவதிலும் நேர சிக்கலை எதிர்கொள்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பில், கொடக்கவெல அலுவலகத்தின் உதவி மேலாளர் ஜெ.வீரசிங்கவிடம் வினவியபோது, எமது போக்குவரத்து சபையின் கீழ் 45 பஸ்கள் சேவையில் ஈடுபடுவதுடன், அவற்றுள் 22 பஸ்கள் சேவையில் ஈடுபடாத வகையில் பழுதடைந்து உள்ளதாகவும் தெரிவித்தார்.

## பசுவை திருடியவர் சிக்கினார்

■ டி.சந்ரு

நானுஓயா பங்களாவத்த பகுதியில் மேய்ச்சலுக்கு விடப்பட்ட பசுவை களவாடி விற்பனை செய்ய முற்பட்டவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹட்டன் பிரதேசத்தில் இருந்து ஸ்கிராப் தோட்டத்துக்கு வருகை தந்த இவர், மீண்டும் நேற்று (24) காலை ஹட்டன் நோக்கி செல்லும் வழியில் பங்களாவத்த பகுதியில் வீதியோரத்தில் மேய்ச்சலுக்கு விடப்பட்ட பசுவின் கயிற்றை அறுத்து, மாட்டினை இழுத்துச் சென்றுள்ளார்.

இதனைக் கண்ட ஒருவர் ஏன்? இவ்வாறு பசுவை, இழுத்துச் செல்கின்றீர்கள் என் வினவிய போது, இதனை விற்பனை செய்யப் போகிறேன், நான் வறுமையில் இருக்கிறேன் எனவும் கூறியுள்ளார்.

இதனால், சந்தேகமடைந்த அந்த நபர், நானுஓயா பொலிஸ் நிலையத்துக்கு அறிவித்த நிலையில், பொலிஸாரும் சம்பவ இடத்துக்கு வருகைத் தந்து, சந்தேகநபரை கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

தலவாக்கலை– நாவலப்பிட்டி வீதி அகலப்படுத்தப்படாமையால்

## விபத்துகள் அதிகரிப்பதாக குற்றச்சாட்டு

■ பி.கேதீஸ்

தலவாக்கலை- நாவலப்பிட்டி பிரதான வீதி அகலப்படுத்தப்படாமல் குறுகலாக காணப்படுவதால் தாம் கடும் சிரமங்களுக்கும் பல்வேறு அசௌகரியங்களுக்கும் முகம் கொடுக்க வேண்டியுள்ளதாக அவ்வீதியைப் பயன்படுத்தும் வாகன சாரதிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த வீதியானது பிரித்தானியர் காலத்தில் அமைக்கப்பட்ட வீதி எனவும், அதன் பின்னர் இதுவரை அகலப்படுத்தப்படாமலும், முறையான அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படாமலும் உள்ளதால், வீதியை பயன்படுத்துவதில் கடும் சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கின்றனர்.

கடந்த சில நாட்களாக பெய்து வரும் கடும் மழை காரணமாக, வீதியில் இருந்த நிலக்கீல் மற்றும் கற்கள் அடித்துச் செல்லப்பட்டு தற்போது அனைத்து இடங்களும் உடைந்து காணப்படுவதாகவும், இதன் காரணமாக சிறிய வாகனங்களான ஓட்டோ, கார்கள், மோட்டார் சைக்கிள்கள், வேன்கள் போன்றவை செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

நாவலப்பிட்டிய நகரில் இருந்து திம்புள பத்தனை சந்தி வரையிலான 30 கிலோமீற்றர் தூரம் எவ்வித அபிவிருத்தியும் மேற்கொள்ளப்படவில்லை, மேலும் வீதி மிகவும் குறுகலாக செங்குத்தான வளைந்த சரிவுகளுடன் இருப்பதால், இரண்டு கதவுகள் கொண்ட பேருந்துகள் மற்றும் பிற கனரக வாகனங்கள் பல பெரிய வாகனங்களில் செல்லும் போது



முந்திச் செல்ல முடியாமல் அதன் பின்னே தொடர்ந்து வாகனங்கள் செலுத்த வேண்டியுள்ளன.

வீதியின் இருபுறமும் உள்ள அனைத்து மதகுகளின் பாதுகாப்பு பகுதிகள் உடைந்து வீதி முழுவதும் பள்ளங்கள் ஏற்பட்டுள்ளன. இந்த வீதியானது தலவாக்கலை, டயகம, அகரப்பத்தனை, போபத்தலாவ, மெனிக்பாலம, மன்ராசி, ஹோல்புருக், மெரயா, திஸ்பன்ன, எல்ஜின், இராணிவத்தை, நாகசேன, லிந்துலை, பால்மஸ்டன், நானுஓயா, பத்தனை, போகாவத்த, கொட்டகலை மற்றும் நாவலப்பிட்டிக்கு செல்லும் குறுகிய வீதி என்றும் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே இந்த வீதியை அகலப்படுத்தி அபிவிருத்தி செய்வதற்கு சம்பந்தப்பட்ட திணைக்களத்தினரும் அதிகாரிகளும் முன்வருமாறு சாரதிகளும் பொதுமக்களும் கோரிக்கை விடுக்கின்றனர்.

# சிவப்பு வலயத்துக்குள் விழுந்து கிடக்கும் இலங்கை

உணவுப் பணவீக்கம் அதிகமாகவுள்ள நாடுகளின் பட்டியலை வெளியிட்டு, உலக வங்கி மற்றுமோர் அதிர்ச்சி வைத்தியத்தை கொடுத்துள்ளது. இன்னும் நான்கு நாடுகளை கடந்துவிட்டால், இலங்கை முதலிடத்தை பெற்றுவிடும். ஆனால், அதற்கான பாராட்டை பெறமுடியாது. உலக நாடுகள் வியந்துநிற்கும்; அந்தளவுக்கு நாட்டின் நிலைமை; அதள பாதாளத்தை நோக்கி மிகவேகமாக சென்று கொண்டிருக்கின்றது.

உலகளாவிய ரீதியில், உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பு அல்லது உணவுப் பணவீக்கம் அதிகமாகவுள்ள நாடுகளின் பட்டியலில், ஐந்தாவது இடத்திலேயே இலங்கை உள்ளதென உலக வங்கி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தப் பட்டியலில் முதலிடத்தை பெறுவதல்ல; இறுதி இடத்தை நோக்கிப் பின்னோக்கிச் செல்லவே வேண்டும். அதற்கான திட்டங்களை அரசாங்கம் தயாரித்து, உடனடியாக அமல்படுத்தவேண்டும்.

அந்தப் பட்டியலின் பிரகாரம், லெபனான் முதல் இடத்தைப் பிடித்துள்ளதுடன், சிம்பாப்வே இரண்டாம் இடத்தையும் வெனிசுவேலா, துருக்கி ஆகிய நாடுகள் மூன்றாம், நான்காம் இடங்களிலும் உள்ளன.

இலங்கை ஐந்தாம் இடத்தில் இருக்கிறது. ஆகையால், மிகவேகமாக பின்னோக்கி நகரவேண்டிய நிலையில் நமது நாடு நிற்கிறது என்பதை ஒவ்வொரு நொடிப்பொழுதிலும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

அதாவது, சிவப்பு எச்சரிக்கையை அல்லது எல்லையை கடந்து, சிவப்பு வலயத்துக்குள் விழுந்துகிடக்கிறது என்பதுதான், ஆபத்தான சமிக்ஞையாகும். இலங்கைக்குப் பின்னால், ஈரான், ஆஜர்ன்டீனா உள்ளிட்ட நாடுகள் உள்ளன.

பொருள் உற்பத்தி, ஏற்றுமதி ஆகியவற்றால் ஏற்பட்ட பாதிப்புகள் காரணமாக, இலங்கை பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கித்தவிக்கிறது. அதற்கிடையில், அரசியல் ஸ்திரத்தன்மையும் ஏற்படவில்லை. அதிலும் 'குடும்பி சண்டை' இடம்பெறுவதாகவே தகவல்கள் கிடைக்கின்றன.

உலக வங்கியின் அறிக்கையின் பிரகாரம், விவசாய உற்பத்தி 40 முதல் 50 சதவீதமாக பாதிக்கப்பட்டதற்குக் காரணம், உரத்தட்டுப்பாடே பிரதான காரணமாக இனங்காணப்பட்டுள்ளது. தற்போதைய நிலைமையில், ஓரளவுக்கு உரம் கிடைத்தாலும், உடனடியாக நல்ல விளைச்சலையும் அறுவடையையும் எதிர்பார்க்க முடியாது. இதற்கிடையே வானிலையும் அவ்வப்போது வாட்டி வதைத்தெடுக்கின்றது.

அத்துடன், பொருட்களை இறக்குமதி செய்வதற்கான டொலர் பற்றாக்குறையும் ஏற்றுமதி செய்வதற்கான பொருட்கள் இன்மையும் மேற்படி விவகாரத்தில் கடுமையான தாக்கத்தை செலுத்துகின்றது. நாளாந்தம் தொடர்ச்சியாக அமல்படுத்தப்படும் மின்வெட்டும், பொருட்கள் உற்பத்திகளுக்கு பெரும் இடைஞ்சலாகவே இருக்கின்றது.

மத்திய வங்கியின் புள்ளிவிவர தகவல்களைப் பார்க்குமிடத்து, நாடு முகங்கொடுத்துக் கொண்டிருக்கும் நெருக்கடியில் இருந்து உடனடியாக மீண்டெழ முடியாது.

ஏனெனில், ஜூனில் 75.8 சதவீதமாக இருந்த உணவுப் பணவீக்கம் ஜூலையில் 82.5 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. அடுத்தடுத்த மாதங்களில் ஏறுமுகத்திலேயே செல்லும்.

இதனால், சாமானியர்களே பெரும் துன்பங்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படும். ஆகையால், பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டெழ அவசரமான தீர்மானங்களை எடுப்பதே சாலச் சிறந்தது.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

கண்களுக்கு பேசும் சக்தியுண்டு. அனேகமாக காதலர்கள் விழிகளாலேயே பேசுகின்றார்கள். கூச்சம் காதலுக்கு அழகு.

வெட்கம் இல்லாமல், காதலர்கள் பொது இடங்களில் எல்லை மீறி நடக்கிறார்கள். கண்ணியமாகக் காதலிப்பதே இரசனைக்குரியது. ஒளிந்து நின்று பார்ப்பதைக் கண்ட பெற்றோர்களோ, உறவினர்களோ, மௌனமாக அங்கிருந்து விலகிவிடுவது பரிதாபம்தான். நேர்மையான மனநிலையில், காதலர்கள் ஒருவரை ஒருவர் நேசிப்பது, இயற்கையானது. அதை இடையூறு செய்வதும் சரியானதல்ல!

ஆனால், எம்மவர்களிடையே சாதி, மதம், பணம், கல்வி எனப் பலவிடயங்களை, பல பெற்றோர்கள் விட்டுவிடுவதாக இல்லை.

பெற்றோர்களிடத்தில் சம்மதம் பெறுவது, மிகக் கடினமானது எனக் கருதியே, காதலர்கள் தங்கள் வழியில், இணைந்து போகின்றார்கள். சிலர் பிரிந்து சோகத்தில் வாழ்கின்றார்கள். ஒருவர் விருப்பங்களை இன்னொருவர் ஏற்பதில்லை. இது சகஜம்; ஆண், பெண் சார்பு சொல்லியா வருகின்றது? நினைத்த அன்பான இணைப்பு, நித்திய சந்தோஷம்; குழம்புவது இனிமை ஆகாது.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

# தமிழ்த் தேசிய அரசியல் எதை நோக்கிப் பயணிக்க வேண்டும்?



புருஜோத்தமன் தங்கமயில்

தமிழ்த் தேசிய அரசியல், சம்பவங்களுக்கும் நிகழ்வுகளுக்கும் பிரதிபலிக்கும் கட்டத்துக்குள் சிக்கிக் கொண்டிருக்கின்றது.

அரசியல் உரிமையையும் விடுதலையையும் முன்னிறுத்தி செயற்பட வேண்டிய தரப்பாக, தமிழ்த் தேசிய கட்சிகளும் அமைப்புகளும் அதுசார் ஓர்மத்தோடும் இராஜதந்திர அணுகுமுறையோடும் நகர வேண்டும். ஆனால், அவ்வாறான கட்டத்தை எந்தவொரு தமிழ்த் தரப்பும் கடந்த சில ஆண்டுகளாகப் பதிவு செய்யவில்லை.

இலங்கை, அதன் அமைவிடம் சார்ந்து, எப்போதுமே சர்வதேச ரீதியில் கவனம் பெறும் நாடாக இருந்து வந்திருக்கின்றது. சீனா, தன்னுடைய தொழில், இராணுவ கட்டமைப்பு ரீதியான முன்னேற்றத்தை அடைந்த போது, சர்வதேச ரீதியில் தன்னுடைய பாதுகாப்பு, புலனாய்வு எல்லைகளை விஸ்தரித்தது. அதன்போக்கில், பசுபிக் பெருங்கடலையும், இந்து மாகடலையும் கையாளும் தேவைகளுக்காக பிராந்திய நாடுகளை கையாளும் முயற்சிகளை முழு முனைப்போடு முன்னெடுத்து வருகின்றது. அதனால், அமெரிக்காவும் மேற்கு நாடுகளும் ஒரு பக்கத்திலும் சீனா தனியொரு நாடாக இன்னொரு பக்கத்திலும் நிற்கின்றன.

ஏற்கெனவே இந்தியாவோடு எல்லைப் பிரச்சினையைக் கொண்டிருக்கிற சீனா, இந்தியாவை அச்சுறுத்தும் அளவுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை எப்போதுமே மேற்கொண்டு வந்திருக்கின்றது. அதன்போக்கில், கடந்த சில தசாப்த காலமாக, இந்தியாவையும், இந்து மாகடலையும் கண்காணிக்கும் களமாக, இலங்கையை சீனா பயன்படுத்தி வருகின்றது.

அண்மையில், ஹம்பாந்தோட்டை துறைமுகம் வரையில் புலனாய்வுப் பணியில் ஈடுபடும் சீனாவின் கப்பல் வந்து சென்றது. இந்தியாவும் மேற்குநாடுகளும் அந்தக் கப்பலின் வருகையை தடுத்து நிறுத்துவதற்கான முயற்சிகளை முழு மூச்சோடு முன்னெடுத்தன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைக் கொண்டு கப்பலின் வருகையை தடுத்து நிறுத்திவிடலாம் என்றும் நம்பின.

ஆனால், ரணிலால் கூட சீனக் கப்பலின் வருகையை தடுத்து நிறுத்த முடியவில்லை. அப்படியான ஆளுகையை இலங்கை மீது, சீனா செலுத்திக் கொண்டிருக்கின்றது. தென் இலங்கையில் மாத்திரமல்ல, வடக்கு, கிழக்கிலும்கூட கடல் அட்டைப் பண்ணைகள் உள்ளிட்ட பல வடிவங்களில் சீனாவின் 'ஒக்டோபஸ்' கரங்கள் நீள்கின்றன.

இந்தக் கட்டத்தில் தமிழ்த் தேசிய கட்சிகள் தங்களில் தாயகப் பிரதேசம் சார்ந்து குறிப்பிட்டளவு ஆளுமை செலுத்த வேண்டும். அதன்மூலம் சர்வதேச அரசியல் ஆட்டங்களுக்குள் ஊடுருவிச் சென்று, ஆதாயங்களை அடையும் நிலை சார்ந்து சிந்திக்க வேண்டும்.

> **தமிழ்த் தேசிய அரசியல் என்பது, எந்தவொரு கட்டத்திலும் இந்தியாவை கொஞ்சமாகவேனும் சங்கடப்படுத்தி விடக்கூடாது என்ற எண்ணத்தில் இயங்கி வந்திருக்கின்றது**

ஆனால், தமிழ்த் தேசிய கட்சிகளும் அமைப்புகளும் பிராந்திய அரசியலில் இந்தியாவே பிரதான தரப்பு என்ற கட்டத்தில் இருந்தே அணுகி வருகின்றன. இலங்கையின் உள்ளக அரசியலில் இந்தியா அளவுக்கு எந்தவொரு நாடும் எந்தக் காலத்திலும் ஆளுமை செலுத்தியது இல்லை.

கிழக்கு இந்தியாவிலிருந்து துரத்தப்பட்ட விஜயனும் அவனது தோழர்களினாலும் இலங்கையில் தோற்றம் பெற்றதே சிங்கள இனம் என்பது மகா வம்சத்து கதை. அப்படியான நிலையில், இலங்கையின் பெரும்பான்மை மக்களின் தொடுப்பு இந்தியாவே. அதுபோல, இலங்கை காலத்துக்கு காலம் இந்தியப் படையெடுப்புகளுக்கு உள்ளாகி, இந்திய மன்னர்களின் ஆட்சியின் கீழ் பல ஆண்டுகள் இருந்திருக்கின்றன.

வெள்ளையின ஆட்சியாளர்களும் வியாபாரிகளும் இலங்கையை ஆக்கிரமித்த போது, கண்டி இராட்சியத்தை ஆட்சி செலுத்தியது நாயக்கர் வம்சத்தினர். காலனித்துவ ஆட்சியின் கீழ் இலங்கை இருந்திருக்காவிட்டால், தற்போதும்கூட இந்தியாவின் ஒரு கூறாக சிலவேளை இருந்திருக்கலாம்.

இறுதியாக, இலங்கை  இந்திய உடன்படிக்கைக்கு அமைய இந்தியாவின் இராணுவம் அமைதி காக்கும் படை எனும் பெயரில் இலங்கைக்குள் வந்து சில ஆண்டுகள் அலைக்கழித்தது.

அப்படியான நிலையில், இலங்கையின் ஆட்சி அதிகார கட்டங்களில் இந்தியா வெகுவான தலையீடுகளைச் செய்து வந்திருக்கின்றது. அதனால், இந்தியாவை நிராகரிக்க முடியாத ஒரு தரப்பாக தமிழ்த் தேசிய தரப்புகள் ஆரம்பம் தொட்டு நம்பி வருகின்றன.

தமிழ்த் தேசிய அரசியல் என்பது, எந்தவொரு கட்டத்திலும் இந்தியாவை கொஞ்சமாகவேனும் சங்கடப்படுத்தி விடக்கூடாது என்ற எண்ணத்தில் இயங்கி வந்திருக்கின்றது. இந்தக் கட்டம், சர்வதேச ரீதியில் இந்திய சார்புக்கு அப்பால் தமிழ்த் தேசிய தரப்புகள் இயங்காது என்கிற கட்டத்தை உருவாக்கி விட்டது.

ஆனால், தமிழ்த் தேசிய தரப்புக்கள் ஆரம்பம் தொட்டு, இந்தியாவுக்கு வழங்கிவந்த முக்கியத்துவத்தை, இந்தியா தமிழ்த் தேசிய தரப்புக்கள் சார்ந்தோ, ஈழத் தமிழ் மக்கள் சார்ந்தோ கொண்டிருந்ததோ என்றால் இல்லை என்பதே வெளிப்படையான பதில்.

எப்போதுமே தென் இலங்கையின் ஆட்சியாளர்களை 'தாஜா 'செய்யும் வேலைகளையே இந்தியா செய்து வந்திருக்கின்றது. இலங்கை சார் இந்தியாவின் அணுகுமுறையில், ஈழத் தமிழ் மக்கள் ஒரு கருவியாகவே இருக்கிறார்கள். தமிழீழ விடுதலைப் புலிகள் போன்றதொரு தரப்பு, தமிழ்த் தேசிய அரசியலில் தீர்மானிக்கும் சக்தியாக எழுந்த போது, அதனை இந்தியா ஒருபோதும் விரும்பவில்லை.

> **தமிழ்த் தேசிய அரசியலில் முகவர்களும் அவர்களின் அணிகளும் மேலெழுந்துவிட்ட நிலையில், தூர நோக்கு என்பது அவசியமற்ற ஒன்று! ஏனெனில், அவர்களின் எதிர்பார்ப்பு, தங்களது பைகளை நிரப்பிக் கொள்ளுதல் என்பதாகும்**

அதனால்தான், புலிகளை முழுமையாக அழித்து ஒழிப்பதற்கான ஆதரவை இந்தியா முழுமையாக வழங்கியது. ஆனால், இரண்டு தசாப்த காலத்துக்கு மேலாக, தமிழ்த் தேசிய அரசியலில் தலைமைச் சக்தியாக இருந்த புலிகள்கூட, இந்தியாவை முழுமையாக எதிர்க்கும் எந்தவொரு கட்டத்துக்கும் வரவில்லை. அது, இந்தியாவை பிராந்திய வல்லரசாக ஏற்றுக்கொண்டமையால் ஆகும்.

ஆரம்பம் முதலே தமிழ்த் தேசிய அரசியல் என்பது, அளவுக்கு மீறிய அளவுக்கு இந்தியாவுக்கான விசுவாசத்தை காட்டி வந்திருக்கின்றது. அதனால் அடைந்த அடைவுகள் என்றால், மாகாண சபை என்கிற அதிகாரங்களற்ற ஓர் ஆட்சிக் கட்டமைப்பு என்பதைத் தவிர வேறெதுவும் இல்லை.

அப்படியான கட்டத்தில், கேள்விகளுக்கு அப்பாலான பரிவை இந்தியாவை நோக்கி காட்டிக் கொண்டிருக்கும் நிலை என்பது, தேவையற்ற எதிரிகளை சர்வதேச ரீதியில் ஏற்படுத்தி விடுகின்றன.

சீனாவைப் பொறுத்தளவில் தமிழ் மக்கள் தங்களுக்கு எதிராவனர்கள் என்பதே உணர்நிலை. அதன்போக்கில்தான், தென் இலங்கை மக்களையும், அவர்களால் தேர்வாகும் ஆட்சியாளர்களையும் முதன்மைப்படுத்திக் கொண்டு, சீனா செயற்பட்டு வந்திருக்கின்றது.

அவர்களைப் பொறுத்தளவில் தமிழ் மக்கள் பிரிவினைவாதிகள். கம்யூனிசம் என்ற பெயரில் ஏதேச்சதிகார ஆட்சி செலுத்தி வரும் சீனா, தங்களுக்கான இலாபம் என்ற ஒற்றைக்கணக்கை முன்னிறுத்தியே செயற்பட்டு வருகின்றது.

அதனால், இந்தியாவின் அடிமைகளாக இருக்கும் தமிழ்த் தேசிய அரசியலையும், அதன் பரப்பையும் எதிரியாகவே கையாண்டு வருகின்றது. அதனால், சர்வதேச ரீதியில் குறிப்பிட்டளவான பின்னடைவை, தமிழ்த் தேசிய தரப்புகள் கண்டிருக்கின்றன.

இந்த இடத்தில்தான், பிராந்திய வல்லரசான இந்தியாவையும் இலங்கையை இன்று ஆட்கொண்டுவிட்ட சீனாவையும் கிட்டத்தட்ட சம தூரத்தில் வைத்து அணுகும் இராஜதந்திர கட்டத்தை நோக்கி தமிழ்த் தேசிய தரப்புகள் நகர வேண்டும்.

இல்லையென்றால், எப்போதுமே ஒரு தரப்பின் அடிமையாக இருந்து, அடைவுகள் இன்றி இருக்க வேண்டும். இராஜதந்திர அணுமுறை என்பது, எதிர்காலத்தைக் குறித்த தெளிவான சிந்தனையோடு இருக்க வேண்டியது. அது இல்லாமல், சம்பவங்களுக்கும் நிகழ்வுகளுக்கும் மாத்திரம் பிரதிபலித்துக் கொண்டிருந்தால், எதையும் அடைய முடியாது.

தமிழ்த் தேசிய அரசியலில் முகவர்களும் அவர்களின் அணிகளும் மேலெழுந்துவிட்ட நிலையில், அவர்களுக்கு தூர நோக்கு என்பது அவசியமற்ற ஒன்று!

ஏனெனில், அவர்களின் எதிர்பார்ப்பு என்பது, தங்களது பைகளை நிரப்பிக் கொள்ளுதல் என்பதாகும். அவ்வாறான கட்டத்தில், அவர்களிடத்தில் அரசியலை தூர நோக்கோடு, இராஜதந்திர கட்டங்களில் அணுகக் கோருவது அபத்தமானதே.

## கடிதங்கள்

### வெவள் தோல ஆற்றுக்குக் குறுக்காக
## பாலம் அமைக்குமாறு கோரிக்கை



பலாங்கொடை பிரதேச செயலக பிரிவிற்கு உட்பட்ட வெல்லவல தோண்டமான்புர ஏ பிரிவிலும் சீ பிரிவிலும் வாழும் 150 குடும்பங்களைச் சேர்ந்த 450 பேர் நாளாந்தம் தொழிலுக்கு செல்ல வேண்டுமானாலும் அப்பகுதியினுடாக வடிந்துதோடும் வெவள் தோல ஆற்றைக் கடந்தே செல்ல வேண்டும்.

கடந்த இருபது வருடங்களாக, இத்தோட்ட மக்கள் அந்த ஆற்றை கடந்து செல்ல, அவர்களே அமைத்து கொண்ட தற்காலிக பாலம் தான் அங்கு இருக்கின்றது. இப்பகுதியில் அதிகமாக மழை பெய்தால், இந்தப் பாலம் அடித்துச் செல்வதாகவும் இதனால் ஒவ்வொறு தடவையும் மக்கள் பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுப்பதாகவும் தெரிவித்தார்கள். அண்மையில் பெய்த கடும் மழையின் போது, இந்தப் பாலம் அடித்து செல்லப்பட்டுள்ளதுடன் வீடுகளுக்குள் வெள்ள நீர் புகுந்துள்ளது. மீண்டும் அப்பகுதி மக்கள் அடித்து அந்த பாலத்தினை எடுத்து வந்து, அவ்விடத்தில் தற்காலிகமாக அமைத்து கொண்டுள்ளார்கள்.

உரிய பாலத்தை பாதுகாப்பான முறையில் வெள்ளம் வரும் போது அடித்து செல்லாத வகையில் அமைத்துத் தருமாறு தோட்ட மக்கள் பல தடவை உரிய அதிகாரிகளுக்கு தெரிவித்த போதிலும், இதுவரையிலும் எவரும் அது தொடர்பில் கவனம் செலுத்தவில்லை என கவலை தெரிவித்த மக்கள், உரிய அதிகாரிகளிடம் பாதுகாப்பான பாலத்தை அமைத்துத் தருமாறு வேண்டுகோள் விடுக்கின்றார்கள்.

மஹிந்த குமார்

புதுடெல்லி

# "புத்தர் தான் முதல் புரட்சியாளர்"

## ஜேஎன்யூ துணை வேந்தர் உரை



"எந்தக் கடவுளுமே பிராமணர் அல்ல; எல்லாப் பெண்களுமே சூத்திரர்கள் தான். புத்த மதமே சிறந்த மதம். புத்தர்தான் முதல் புரட்சியாளர், முதல் பகுத்தறிவுவாதி" என்று ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழக துணை வேந்தர் சாந்திஸ்ரீ துலிபுடி பண்டிட் தெரிவித்துள்ளார்.

மத்திய சமூகநலத் துறை அமைச்சகத்தின் சார்பில் நடந்த பி.ஆர்.அம்பேத்கர் தொடர் கருத்தரங்கத்தில் உரையாற்றிய போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"பாலின சமத்துவ நீதி மீது டாக்டர் பி.ஆர்.அம்பேத்கரின் பார்வை: பொது சிவில் சட்டத்தை அறிதல்" எனும் தலைப்பில் உரையாற்றிய அவர்,

"மானுடவியல் ரீதியாக, அறிவியல் ரீதியாக... நமது கடவுளரின் தோற்றத்தை உற்றுப் பாருங்கள். நம் கடவுளரில் யாருமே பிராமணர் அல்ல. அதிகபட்சமாக சத்ரியராக இருப்பார்கள். அதிலும் சிவன் நிச்சயமாகபட்டியலினத்தவராகவோ அல்லது பழங்குடி இனத்தவராகத் தான் இருக்க வேண்டும். அவர் சுடுகாட்டில் கழுத்தில் பாம்புடன் இருக்கிறார். அவருக்கு குறைந்தபட்ச ஆடைதான் அணிவிக்கப்பட்டிருக்கிறது. ஒரு பிராமணரால் சுடுகாட்டில் இருக்க முடியாதுதானே. ஆகையால் மானுடவியல் ரீதியாக கடவுள் யாருமே உயர் சாதியைச் சேர்ந்தவர்கள் இல்லை. மகாலக்ஷ்மியும் அப்படித்தான், சக்தியும் அப்படித்தான். நம் ஜகநாதரை எடுத்துக் கொள்ளுங்கள். அவர் பழங்குடியைச் சேர்ந்தவர். அப்புறம் ஏன் இத்தனைப் பாகுபாடுகள். கொஞ்சமும் மனிதம் இல்லாத பாகுபாடுகள் எதற்காக?

மனுஸ்மிருதி என்னச் சொல்கிறது. எல்லா பெண்களும் சூத்திரர்கள் என்றுதான் சொல்கிறது. எந்தப் பெண்ணும் தன்னை பிராமணப் பெண் என்று கூறிக் கொள்ள முடியாது. பிறப்பால் தந்தை மூலமாகவோ அல்லது திருமணத்தால் கணவன் வாயிலாகவோ தான் அவளால் சாதியைப் பெற முடிகிறது. இது மிதமிஞ்சிய அளவிலான அடக்குமுறை.


நிறைய பேர் சாதி பிறப்பால் வருவதில்லை எனக் கூறுகின்றனர். ஆனால், இன்று சாதி பிறப்பால்தான் நிர்ணயிக்கப்படுகிறது. ஒரு பிராமணரோ அல்லது வேறு சாதியினரோ ஒரு செருப்பு தைக்கும் தொழிலாளியாக இருந்தால் அவர் தலித் ஆகிவிடுவாரா? இல்லை தானே!

இதனை நான் ஏன் சொல்கிறேன் என்றால், அண்மையில் ராஜஸ்தானில் ஒரு பட்டியலினச் சிறுவன், உயர் சாதியைச் சேர்ந்த ஆசிரியர் தண்ணீர் அருந்தும் பானையை தொட்டதற்காகவே அடித்துக் கொல்லப்பட்டிருக்கிறான். அச்சிறுவன் தண்ணீரை அந்தப் பானையில் இருந்து அருந்தவில்லை. தண்ணீரை தொட்டதற்காகவே அடித்துக் கொலை செய்யப்பட்டார். தயவு செய்து புரிந்து கொள்ளுங்கள். இவை மனித உரிமை பிரச்சினை. நம் சக மனிதரை எப்படி நாம் இதுபோன்று நடத்த முடியும் என்றும் கேட்டார்.

மும்பை

# குற்றவாளிகளை கௌரவிப்பது அருவருப்பானது

## தண்டனை வழங்கிய நீதிபதி கருத்து



குஜராத் மாநிலத்தில் கடந்த 2022 ஆம் ஆண்டு கோத்ரா ரயில் எரிப்பு சம்பவத்தை தொடர்ந்து வன்முறை, மதக்கலவரம் ஏற்பட்டது. இந்த கலவரத்தின்போது 2022 பெப்ரவரி 28 ஆம் திகதி டோஹட் மாவட்டம் ராதிக்பூர் கிராமத்தை சேர்ந்த பில்கிஸ் பானு தனது குடும்பத்துடன் கிராமத்தை விட்டு வெளியேறி வேறு பகுதிக்கு சென்றார்.

இஸ்லாமிய மதத்தை சேர்ந்த 21 வயதான பில்கிஸ் பானு 5 மாதம் கர்ப்பினியாக இருந்தார். அவருக்கு 3 வயதில் பெண் குழந்தையும் இருந்தது. தனது குடும்ப உறுப்பினர்கள் 17 பேருடன் வேறு கிராமத்திற்கு புறப்பட்டார்.

பில்கிஸ் பானு தனது குடும்ப உறுப்பினர்களுடன் ஷபர்வாட் என்ற கிராமத்தை அடைந்த போது 20-30 பேர் கொண்ட கும்பல் அவர்கள் மீது தாக்குதல் நடத்தியது. 3 வயது குழந்தையை சுவற்றில் அடித்துக்கொன்ற அந்த கும்பல் கர்ப்பினியான பில்கிஸ், அவரது தாயார், மேலும் 3 பெண்களை கூட்டு பாலியல் வன்கொடுமை செய்தது. குடும்பத்தினர் 14 பேர் கொடூரமாக கொலை செய்யப்பட்டனர்.

17 பேரில் மூவர் மட்டுமே உயிர் பிழைத்தனர். இந்த கொடூர சம்பவம் தொடர்பாக 11 பேர் குற்றவாளிகளென 2008 ஆம் ஆண்டு மும்பை சிபிஐ சிறப்பு நீதிமன்ற நீதிபதி யுடி சல்வி தீர்ப்பளித்தார். குற்றவாளிகள் 11 பேருக்கும் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் இருந்த குற்றவாளிகள் 11 பேரையும் கருணை அடிப்படையில் குஜராத் அரசு கடந்த 15ஆம் திகதி சுதந்திர தினத்தன்று விடுதலை செய்தது.

இந்நிலையில், பில்கிஸ் பானு பாலியல் குற்றவாளிகள் விடுதலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக இந்த வழக்கில் தீர்ப்பு வழங்கிய மும்பை சிபிஐ சிறப்பு கோர்ட்டு நீதிபதி யுடி சல்வி கருத்து தெரிவித்துள்ளார்.

'பில்கிஸ் பானுவுக்கு துணை நிற்போம்' என்ற தலைப்பில் 'அநீதி மற்றும் பாகுபாடுகளுக்கு எதிராக ஒன்றுபடுவோம்' என்ற அமைப்பு சார்பில் நடந்த நிகழ்ச்சியில் பில்கிஸ் பானு வழக்கில் தீர்ப்பு வழங்கிய முன்னாள் நீதிபதி யுடி சல்வி பங்கேற்றார்.

இந்த வழக்கில் குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கியதில் நான் எதுவும் சிறப்பாக செய்ததாக நான் கருதவில்லை. எனது தீர்ப்பு எனது கடமை. கருணை அடிப்படையில் குற்றவாளிகளை விடுதலை செய்ய மாநில அரசுக்கு உரிமை உள்ளது. இது சட்டத்தின் படி மாநிலத்திற்கு வழங்கப்பட்ட அதிகாரம் ஆகும். குற்றவாளிகளை விடுதலை செய்ய எந்தெந்த காரணிகள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டது என எனக்கு தெரியாது. ஆகையால், குற்றவாளிகளை முன்கூட்டியே விடுதலை செய்த மாநில அரசின் முடிவு குறித்து நான் கருத்து தெரிவிக்க முடியாது.

ஆனால், குற்றவாளிகள் சிலரால் கௌரவிக்கப்படுவது அருவருப்பானது. குற்றவாளிகள் அவர்களாகவே இந்த கௌரவத்தை ஏற்றுக்கொள்ளக்கூடாது. நான் பிறப்பித்த தீர்ப்பை மீண்டும் வாசித்து பார்க்க விரும்புகிறேன். ஆனால், நீண்ட நாட்கள் ஆனதால் அந்த தீர்ப்பு கிடைக்கவில்லை' என்றார்.

பெங்களூரு:



# தேனீக்களை பாதுகாக்க கூண்டுகள்

வேகமாக அழிந்துவரும் பூச்சி இனங்களின் பட்டியலில் தேனீயும் இருக்கிறது. அவற்றின் அழிவு மனித இனத்தின் அழிவுக்கு வழிவகுக்கும் என விஞ்ஞானிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். ஆனால் அவற்றை பாதுகாப்பதற்கான திட்டங்கள் குறைவாக இருக்கின்றன.

குறிப்பாக பெங்களூருவில் அதிகரித்து வரும் கட்டிடங்களின் எண்ணிக்கையால் தேனீக்களின் எண்ணிக்கை வெகுவாக குறைந்துள்ளது. இத்தகைய நகரங்களில் தேனீக்களை அழியாமல் பாதுகாப்பதற்காக விஞ்ஞானிகள் 'தேனீ கூண்டு' என்ற திட்டத்தை உருவாக்கியுள்ளனர்.

இதுகுறித்து அசோகா சூழலியல் ஆய்வு நிறுவனத்தின் ஆராய்ச்சியாளர் சேத்தனா காசிகர் கூறியதாவது: நகரங்களில் தேனீக்களை பாதுகாப்பது குறித்து எங்களது ஆராய்ச்சியாளர்கள் கடந்த 10 மாதங்கள் பல்வேறு கள ஆய்வுகளை மேற்கொண்டோம். அதன் அடிப்படையில் 'தேனீ கூண்டு' என்ற அமைப்பை உருவாக்கினோம். இந்த தேனீ கூண்டு, மூன்று பிரிவுகளைக் கொண்ட 2 அடி உயரமான அமைப்பாகும்.

புதுடெல்லி




# காங்கிரஸின் அடுத்த தலைவர் யார்?

## ஞாயிறன்று கூட்டம்

காங்கிரஸ் கட்சியின் அடுத்த தலைவரை தேர்வு செய்வதற்கான தேர்தல் திகதியை உறுதி செய்வது குறித்து ஆலோசனை செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

காங்கிரஸ் கட்சியின் காரிய கமிட்டி கூட்டம் எதிர்வரும் 28 ஆம் திகதி நடைபெற உள்ளது. காணொளி வாயிலாக நடைபெறும் இந்தக்கூட்டம் பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெற இருப்பதாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் கேசி வேணுகோபால் தெரிவித்துள்ளார். கட்சியின் தலைவர் சோனியா காந்தி தலைமையில் நடைபெறும் காரிய கமிட்டி கூட்டத்தில் காங்கிரஸ் கட்சியின் அடுத்த தலைவரை தேர்வு செய்வதற்கான தேர்தல் திகதியை உறுதி செய்வது குறித்து ஆலோசனை செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# நல்லைக்கந்தன் தேர் வெள்ளோட்டம்...

நல்லூர் கந்தசுவாமி கோவிலின் புனருத்தாரணம் செய்யப்பட்ட சித்திரத்தேர் வெள்ளோட்டம், நேற்று (24) காலை 7 மணிக்கு இடம்பெற்றது. (படங்கள் – எம்.றொசாந்த்)











# நூலகம் திறந்துவைப்பு...



காத்தான்குடி ஸாவியா மகளிர் வித்தியாலயத்தின் 77ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, காத்தான்குடி நகர சபையின் அனுசரணையில் விஸ்தரிக்கப்பட்ட நூலகம் பாடசாலை பிரதி அதிபர் எம்.வை.எம் யூசுப் இம்றானின் ஒருங்கிணைப்பில், அதிபர் எஸ்.எல்.ஏ கபூர் தலைமையில் திங்கட்கிழமை (22) நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியான காத்தான்குடி நகர சபைத் தவிசாளர் எஸ்.எச்.எம் அஸ்பர் ஜே.பி கலந்துகொண், புதிய நூலகத்தை திறந்துவைத்தார்.

இந்த நூலகத் திறப்பு விழாவுக்கு காத்தான்குடி நகர சபையால் சுமார் 1,300க்கும் மேற்பட்ட புத்தகங்களும் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டதுடன், பாடசாலை மாணவிகளின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

(படங்கள் – பாறுக் ஷிஹான்)







# கதிரைகள் கையளிப்பு...

திருகோணமலை வெள்ளைமணல் அல் அஸ்ஹர் முஸ்லிம் மகா வித்தியாலயத்துக்கு சுமார் 40 பிளாஸ்டிக் கதிரைகள், வெள்ளைமணல் சனசமூக நிலையத்தின் பங்களிப்புடன், திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபை உப தவிசாளர் முகமட் நௌபரினால் பாடசாலை அதிபர் அமீனிடம் உத்தியோகபூர்வமாக நேற்று (24) கையளிக்கப்பட்டன.

(படங்கள் ஹஸ்பர்)





இன்று ஆரம்பிக்கிறது இரண்டாவது டெஸ்ட்:

# தென்னாபிரிக்காவை வீழ்த்துமா இங்கிலாந்து?

இங்கிலாந்து, தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியானது, ஒல்ட் ட்ரஃபோர்ட்டில் இலங்கை நேரப்படி இன்று பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளது.

அதிரடியான தொடக்கத்தைப் பெற்ற தலைமைப் பயிற்றுவிப்பாளர் பிரண்டன் மக்கலம், அணித்தலைவர் பென் ஸ்டோக்ஸின் புதிய இங்கிலாந்தானது மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில் இனிங்ஸ் தோல்வியைத் தளுவிய நிலையிலேயே இப்போட்டியானது முக்கியத்துவம் பெறுகிறது.



மோசமான துடுப்பாட்டம், சிறப்பான பந்துவீச்சால் முதலாவது போட்டியில் தோல்வியைத் தளுவிய இங்கிலாந்து தமது அதிரடிப் பாணியைத் தொடரப் போவதாக மக்கலம், ஸ்டோக்ஸ் தெரிவித்துள்ளபோதும் அது எவ்வளவுக்கு சாத்தியம் என்பது தெரியவில்லை.

குறிப்பாக தொடர்ந்தும் ஓட்டங்களைப் பெறத் தடுமாறி வரும் ஸக் க்றொலிக்கு மேலும் எத்தனை வாய்ப்புகள் கிடைக்கும் என்பது தெளிவில்லாமலுள்ளது.

தென்னாபிரிக்காவைப் பொறுத்த வரையில் குறைக்கள் என இல்லாதபோதும் ஏய்டன் மார்க்ரத்திடமிருந்து குறிப்பிடத்தக்க இனிங்ஸ் எதிர்பார்க்கப்படுகின்றது.

இரண்டு அணிகளிலும் மாற்றமெதுவும் இருக்காது எனவே நம்பப்படுகின்றது.

எதிர்பார்க்கப்படும் இங்கிலாந்து அணி: 1. அலெக்ஸ் லீஸ், 2. ஸக் க்றொலி, 3. ஒலி போப், 4. ஜோ றூட், 5. ஜொனி பெயார்ஸ்டோ, 6. பென் ஸ்டோக்ஸ், 7. பென் போக்ஸ், 8. ஸ்டுவர்ட் ப்றோட், 9. மத்தியூ பொட்ஸ், 10. ஜேக் லீச், 11. ஜேம்ஸ் அன்டர்சன். எதிர்பார்க்கப்படும் தென்னாபிரிக்க அணி: 1. டீன் எல்கர், 2. சரெல் எர்வீ, 3. கீகன் பீற்றர்ஸன், 4. ஏய்டன் மார்க்ரம், 5. றஸி வான் டர் டுஸன், 6. கைல் வெரைன், 7. மார்கோ ஜன்சன், 8. கேஷவ் மஹராஜ், 9. ககிஸோ றபாடா, 10. அன்றிச் நொர்ட்ஜே, 11. லுங்கி என்கிடி.

ஆசியக் கிண்ணம்:

# குழு பியிலிருந்து சுப்பர் 4க்கு முன்னேறுவது யார்?

■ முருகவேல் சண்முகன்

ஆசியக் கிண்ணத் தொடரானது நாளை மறுதினம் ஆரம்பிக்கவுள்ளது. இம்முறை ஆறு அணிகள் பிரதான தொடரில் விளையாடவுள்ளன. இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் ஆகியன நேரடியாக பிரதான தொடருக்குத் தகுதி பெற்றுள்ளதுடன், ஆறாவது அணியானது தகுதிகாண் போட்டிகளிலிருந்து தெரிவு செய்யப்படவுள்ளது.

இந்நிலையில், பிரதான தொடரில் பங்கேற்கும் ஆறு அணிகளும் மூன்று மூன்றாக இரண்டாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு குழுவிலும் லீக் முறையில் போட்டிகள் நடைபெற்று அதில் முதலிரண்டு அணிகளும் சுப்பர் – 4 சுற்றுக்குத் தகுதி பெற்று, சுப்பர் – 4 சுற்றில் லீக் முறையில் போட்டிகள் இடம்பெற்று முதலிரண்டு அணிகளும் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெறவுள்ளன.

அந்தவகையில் இப்பத்தியானது குழு பியில் இடம்பெற்றுள்ள இலங்கை, ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ் அணிகளைப் பற்றி ஆராய்கிறது. ஏறத்தாழ மூன்று அணிகளும் இக்குழுவில் சமபல அணிகளாகக் காணப்படுவதோடு, இதில் எந்த இரண்டு அணிகள் முன்னேறினாலும் ஆச்சரியப்படுவதுக்கில்லை.

அண்மைய காலப் பெறுபேறுகளை வைத்துப் பார்க்கும்போது ஆப்கானிஸ்தான், இலங்கை ஆகியன சுப்பர்- 4 சுற்றுக்கு முன்னேறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையணியைப் பொறுத்த வரையில் மகேஷ் தீக்‌ஷன, வனிடு ஹஸரங்க, ஜெஃப்ரி வன்டர்சே, தனஞ்சய டி சில்வா, சரித் அஸலங்க என பலமான சுழற்பந்துவீச்சு வரிசையே இலங்கையின் பலமாக குறிப்பிட்டுச் சொல்லக்கூடியதாகக் காணப்படுகிறது. காயம் காரணமாக துஷ்மந்த சமீரவை இலங்கை இழந்தமையானது அவ்வணிக்கு பின்னடைவாகக் காணப்படுகிறது. வேகப்பந்துவீச்சைப் பொறுத்தவரையில் அனுபவமற்ற பிரமோத் மதுஷன், டில்ஷான் மதுஷங்க, மதீஷ பத்திரண ஆகியோரே குழாமில் காணப்படுகின்றனர்.

துடுப்பாட்டத்தைப் பொறுத்தவரையில் பதும் நிஸங்க, குசல் மென்டிஸ், சரித் அஸலங்க, பானுக ராஜபக்‌ஷவோடு அணித்தலைவர் தசுன் ஷானக, தனஞ்சய டி சில்வா ஆகியோர் தொடர்ச்சியான பெறுபேறுகளை வெளிப்படுத்தினாலே ஏனைய அணிகளுக்கு இலங்கை சவாலையளிக்க முடியும்.

குழாம்: தசுன் ஷானக (அணித்தலைவர்), சரித் அஸலங்க, அஷேன் பண்டார, தினேஷ் சந்திமால், வனிடு ஹஸரங்க, தனஞ்சய டி சில்வா, நுவனிடு பெர்ணாண்டோ, தனுஷ்க குணதிலக, பிரவீன் ஜெயவிக்கிரம, சாமிக கருணாரத்ன, பிரமோத் மதுஷன், டில்ஷான் மதுஷங்க, குசல் மென்டிஸ், பதும் நிஷங்க, மதீஷ பத்திரண, பானுக ராஜபக்‌ஷ, மகேஷ் தீக்‌ஷன, ஜெஃப்ரி வன்டர்சே.

அடுத்து ஆப்கானிஸ்தானைப் பொறுத்த வரையில் இருபதுக்கு – 20 போட்டிகளின் வருகையால் அதிகம் பயனடைந்த அணியாக அவ்வணியையே சொல்ல முடியும். சர்வதேசப் போட்டிகள் குறைவு என்பதால் பல வீரர்கள் உலகம் முழுவதுமுள்ள லீக்குகளில் விளையாடி பட்டை தீட்டப்பட்டவர்களாகக் காணப்படுகின்றனர்.

அணித்தலைவர் மொஹமட் நபி, நஜிபுல்லாஹ் ஸட்ரான், ஹஸரத்துல்லா ஸஸாய், அஃப்ஸர் ஸஸாய் என அதிரடியாகத் துடுப்பெடுத்தாடக் கூடிய வீரர்களுடன், இப்ராஹிம் ஸட்ரான், ஹஷ்மதுல்லாஹ் ஷகிடி என இனிங்ஸை நகர்த்திச் செல்லக்கூடிய வீரர்களும் காணப்படுகின்றனர்.

பந்துவீச்சைப் பொறுத்தவரையில் ரஷீட் கான் தலைமையில் முஜீப் உர் ரஹ்மான், நூர் அஹ்மட் என சுழற்பந்துவீச்சுப் பட்டாளமே காணப்படுவதுடன், வேகப்பந்துவீச்சிலும் விக்கெட்டுகளை வீழ்த்தும் பஸல்ஹக் பரூக்கி, நவீன்-உல்-ஹக் ஆகியோர் காணப்படுவது ஆப்கானிஸ்தானை மேலும் பலமாக்குகிறது.



குழாம்: மொஹமட் நபி (அணித்தலைவர்), நஜிபுல்லாஹ் ஸட்ரான் (உப அணித்தலைவர்), அஃப்ஸர் ஸஸாய், அஸ்மதுல்லாஹ் ஓமர்ஸாய், பரீட் அஹ்மட், பஸல்ஹக் பரூக்கி, ஹஷ்மதுல்லாஹ் ஷகிடி, ஹஸரதுல்லாஹ் ஸஸாய், இப்ராஹிம் ஸட்ரான், கரிம் ஜனட், முஜீப் உர் ரஹ்மான், நஜிபுல்லாஹ் ஸட்ரான், நவீன்-உல்-ஹக், நூர் அஹ்மட், ரஹ்மனுல்லாஹ் குர்பாஸ், ரஷீட் கான், சமியுல்லாஹ் ஷின்வாரி.

அடுத்து மூன்றாவது அணியான பங்களாதேஷை நோக்குகையில் ஒரு காலத்தில் சிறந்த அணியொன்றாக வளர்ச்சி கண்டு வந்த அணியானது தொடர்ச்சியான மாற்றங்கள், கிரிக்கெட் சபைத் தலைவரின் தலையீடுகள், களத்துக்கு வெளியேயான விடயங்களால் சரிவை எதிர்நோக்குகின்றது.

அணித்தலைவராகப் பெயரிடப்பட்டுள்ள ஷகிப் அல் ஹஸன், முன்னாள் அணித்தலைவர் மகமதுல்லா, முஷ்பிக்கூர் ரஹீம் ஆகியோர் அண்மைய காலங்களில் ஓட்டங்களைப் பெறாமை சிக்கலுக்குரியதாகக் காணப்படுகின்றது.

இருபதுக்கு – 20 சர்வதேசப் போட்டிகளிலிருந்து தமிம் இக்பால் ஓய்வு பெற்றுள்ளமையும், நுருல் ஹஸன் காயமடைந்துள்ளமையும் பங்களாதேஷுக்கு பின்னடைவாகக் காணப்படுவதுடன், ஷொரிஃபுல் இஸ்லாம் தெரிவுசெய்யப்படாமை ஆச்சரியமளிக்கிறது.

துடுப்பாட்டத்தைப் பொறுத்த வரையில் அஃபிஃப் ஹொஸைன் மாத்திரமே அண்மைய காலங்களில் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியவராகக் காணப்படுகின்றார். சுழற்பந்துவீச்சைப் பொறுத்தவரையில், ஷகிப் அல் ஹஸன், நசும் அஹ்மட், மஹெடி ஹஸன், மெஹிடி ஹஸன் மிராஸ் எனப் பலமானதாகவே காணப்படுகின்றது. முஸ்தபிசூர் ரஹ்மான், தஸ்கின் அஹ்மட் என வேகப்பந்துவீச்சும் சொல்லிக் கொள்ளும்படியாகவே காணப்படுகின்றது.

குழாம்: ஷகிப் அல் ஹஸன் (அணித்தலைவர்), அனாமுல் ஹக், முஷ்பிக்கூர் ரஹீம், அஃபிஃப் ஹொஸைன், மொஷாடெக் ஹொஸைன், மகமதுல்லாஹ், மஹெடி ஹஸன், மொஹமட் சைபுடீன், முஸ்தபிசூர் ரஹ்மான், நசும் அஹ்மட், சபீர் ரஹ்மான், மெஹிடி ஹஸன் மிராஸ், தஸ்கின் அஹ்மட், எபொடொட் ஹொஸைன், பர்வேஸ் ஹொஸைன் எமோன், மொஹமட் நைம்.

கோலாலம்பூர்:

# முன்னாள் பிரதமருக்கு 12 ஆண்டு சிறை உறுதி

மலேசிய முன்னாள் பிரதமர் நஜிப் ரசாக், தனது பதவிக்காலத்தில் அந்நாட்டின் அரசு முதலீட்டு நிதி அமைப்பான 1 எம்.டி.பி. நிறுவனத்தில் ரூ.4,500 கோடியை ஊழல் செய்ததாக பரபரப்பான குற்றச்சாட்டு எழுந்தது.

இதுதொடர்பாக அவருக்கு சொந்தமான வீடுகள், அலுவலகங்களில் மலேசிய ஊழல் தடுப்பு பிரிவினர் சோதனை நடத்தி ஏராளமான நகை, ரொக்கத்தை கைப்பற்றினர். இதுதொடர்பான வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், நஜிப் ரசாக் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டதையடுத்து அவருக்கு 12 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.



இதைத் தொடர்ந்து தீர்ப்பை எதிர்த்து நஜிப் ரசாக், மலேசிய உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தார்.

இந்த மேல்முறையீட்டு வழக்கில் விசாரணை முடிவடைந்த நிலையில், இறுதி தீர்ப்பை நேற்று (24) நீதிபதிகள் வழங்கினர். அப்போது நஜிப் ரசாக்குக்கு உயர் நீதிமன்றம் விதித்த 12 ஆண்டு சிறைத்தண்டனையை உறுதி செய்து நீதிபதிகள் தீர்ப்பளித்தனர்.

இத்தாலி



# அமெரிக்க படைவீரர் சிறுவனைக் கொன்றார்

இத்தாலியின் போர்சியாவில், 15 வயதான சிறுவனை குடிபோதையில் இருந்தபடி காரோட்டும்போது தனது காரால் மோதிய ஐக்கிய அமெரிக்க விமானப் படைவீராங்கனை இத்தாலியில் விசாரணையை எதிர்கொள்ள வேண்டும் எனவும், ஐக்கிய அமெரிக்காவுக்கு திருப்பி அனுப்பக்கூடாது என சிறுவனின் தாயார் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார். ஐக்கிய அமெரிக்க இராணுவம் தொடர்புபட்ட குறித்த பகுதியில் இடம்பெற்ற மோசமான விபத்துகள் தெரியும் எனத் தெரிவித்த சிறுவனின் தாயார், உண்மை என்னவெனில் இப்பகுதியில் அவர்கள் விரும்பியதைச் செய்யலாமென்றும், தண்டனையைப் பெறாமல் இருக்கலாம் எனக் குறிப்பிட்டதுடன், குறித்த வீராங்கனை தனது தண்டனைக் காலத்தை இங்கே களிக்க வேண்டும் எனக் கூறியுள்ளார்.

டிஸ்கோ ஒன்றிலிருந்தே தனது காருக்குள் படைவீராங்கனை ஏறியுள்ளார்.

பெய்ஜிங்

# சர்ச்சைக்குரிய வரைபடங்கள்: 27 பேர் மீது நடவடிக்கை

சீன பள்ளி பாடப் புத்தகத்தில் சர்ச்சைக்குரிய வரைபடங்கள் இடம்பெற்றதால் கல்வி அதிகாரிகள் 27 பேர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சீனாவின் ஆரம்ப கல்வி கணித புத்தகங்கள் 10 ஆண்டுகளுக்கு முன்பு வெளியிடப்பட்டன. அதிலுள்ள வரைபடங்களில் சீன குழந்தைகள் போல் இல்லை. படங்கள் அழகாக இல்லாமல் அசிங்கமாக இருந்துள்ளன. ஒரு வரைபடத்தில் சிறுவர்கள், சிறுமிகளின் உடையை இழுப்பது போன்றும், ஒரு குழந்தையின் காலில் பச்சை குத்தப்பட்டுள்ளது போன்றும் வரைபடங்கள் உள்ளன குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஆசிரியர் ஒருவர், பள்ளி பாடப்புத்தகங்களில் உள்ள வரைபடங்களை சமூக ஊடகத்தில் வெளியிட்டு விமர்சித்திருந்தார். இந்த படங்கள் கலாசார சீரழிவு எனவும், அமெரிக்க கலாசாரம் போல் உள்ளது எனவும் விமர்சிக்கப்பட்டது.

இதனால் சீன அரசு தற்போது இது குறித்து விசாரணை நடத்தி, இதற்கு காரணமான கல்வித்துறை அதிகாரிகளை கண்டுபிடித்து நடவடிக்கை எடுத்துள்ளது. மொத்தம் 27 அதிகாரிகள், கடமை தவறி பொறுப்பின்றி செயல்பட்டதாக கூறி அவர்கள் பொறுப்புகளில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். பாடபுத்தகங்கள் வடிவமைப்பு பணியில் இவர்கள் இனிமேல் ஈடுபடுத்தப்பட மாட்டார்கள் என சீன கல்வித்துறை தெரிவித்துள்ளது.



பிரேசிலியா,



# போர்ச்சுகீசிய மன்னரின் இதயம் பிரேசில் சென்றது

தென் அமெரிக்க நாடுகளில் ஒன்றான பிரேசில், சுமார் 300 ஆண்டுகளாக போர்ச்சுகீசியர்களின் காலணி ஆதிக்கத்தின் கீழ் இருந்து வந்தது. அதனை தொடர்ந்து 1822 ஆம் ஆண்டு செப்டம்பர் 7-ந்தேதி, போர்ச்சுகீசிய மன்னரான டாம் பெட்ரோ என்பவர், பிரேசிலை சுதந்திர நாடாக அறிவித்தார்.

இதனை தொடர்ந்து 1834 ஆம் ஆண்டு தனது 35-வது வயதில் டாம் பெட்ரோ காலமானார். அன்று முதல் அவரது இதயம் போர்ச்சுகல் நகரமான போர்ட்டோவில் அமைந்துள்ள ஒரு தேவாலயத்தில் பாதுகாக்கப்பட்டு வருகிறது. இதற்கென பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட தங்க கலசத்தில் ஃபார்மல்டிஹைட் வேதிப்பொருளை பயன்படுத்தி டாம் பெட்ரோவின் இதயத்தை பாதுகாத்து வருகின்றனர். பிரேசில் நாட்டின் சுதந்திர தினம் கொண்டாடப்படும் சமயத்தில் இந்த இதயம் 3 வாரங்களுக்கு பிரேசில் அரசிடம் வழங்கப்படுகிறது. அந்த வகையில் பிரேசில் நாட்டின் 200-வது ஆண்டு சுதந்திர தினத்தை முன்னிட்டு டாம் பெட்ரோவின் இதயம் தற்போது பிரேசிலுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இதனை பிரேசில் அதிபர் ஜெய்ர் போல்சனாரோ, முழு இராணுவ மரியாதையுடன் பெற்றுக் கொண்டார்.



# மிளிரும் அரோரா

ஜேம்ஸ் வெப் தொலைநோக்கி சூரியக் குடும்பத்திலேயே பெரிய அளவிலான வியாழன் கோளை படம்பிடித்து அனுப்பியுள்ளது.

கடந்த ஜூன் மாதம் ஜேம்ஸ் வெப் தொலைநோக்கி SMACS 0723 விண்மீன் திரள், தெற்கு வளைய நெபுலா, ஸ்டிபன்ஸ் குவின்டெட், கரினா நெபுலா ஆகியவற்றின் தெளிவான படங்களை எடுத்து நாசாவுக்கு அனுப்பியது. இந்த நிலையில், வியாழன் கோளின் புகைப்படத்தை ஜேம்ஸ் வெப் தொலை நோக்கி அனுப்பியுள்ளது.

நமது சூரியக் குடும்பத்தில் மிகப் பெரிய கோள் என்று அறியப்படும் வியாழன் கோளை ஜேம்ஸ் வெப் தொலை நோக்கி எடுத்த புகைப்படம் அறிவியல் உலகத்தை மீண்டும் ஆச்சரியத்தில அழ்த்தியுள்ளது. வியாழன் கோளின் வட மற்றும் தென் முனைகளில் அரோரா ஒளிகள் படர்ந்து காணப்படுகின்றன. வியாழனின் நிலவுகளையும் (வியாழன் கோளுக்கு மொத்தம் 79 நிலவுகள் உள்ளன), அதனைச் சுற்றியுள்ள வாயுகளையும், வளையங்களையும் ஜேம்ஸ் வெப் தொலை நோக்கி எடுத்த படத்தில் தெளிவாக தெரிகின்றன.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 25 ஓகஸ்ட் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.